# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு IV

பகுதி 1

**Kerala Reader - Tamil**
**Standard IV**
**Part - 1**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

தமிழ்

4

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

பிற உயிரினங்களிடமிருந்து மனித இனத்தைத் தனிமைப்படுத்துவதும் பெருமைப்படுத்துவதும் மொழியே. கருத்துப் பரிமாற்றத்திற்குப் பெரிதும் துணைபுரியும் மொழி இல்லையேல் விலங்கினத்தின் இன்னொரு பிரிவாகவே மனித இனமும் இருந்திருக்கும். பிற உயிரினங்களின் வாழ்க்கைமுறை முன்பிருந்தபடி அப்படியே நூற்றாண்டுகளைத் தாண்டியும் நிலை பெறுகிறது. ஆனால் காலந்தோறும் வாழ்வியலில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படும் இனம் மனித இனம் மட்டுமே. விலங்கின வாழ்க்கைக்கு நிகரான ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த மனித இனம் நாகரிக, பண்பாட்டு வளர்ச்சியினால் இன்று எவ்வளவோ மாறிவிட்டது. அறிவியலில் புரட்சிகரமான ஒரு வளர்ச்சியை அடைந்துள்ளோம். இவற்றிற்கெல்லாம் அடித்தளமாக இருப்பது மொழியே என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

மொழியை ஒரு மொழியாக மட்டும் கற்காமல், அந்த மொழியின் வாயிலாக நம்மையும் நாம் வாழும் சமூகத்தையும் சுற்றுப்புறத்தையும் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு கற்க வேண்டும் என்பதே நமது அடிப்படை நோக்கம். அதன் அடிப்படையில் எளிமையும் இனிமையும் கலந்த மொழிநடையில் பொருத்தமான கருத்துகளுடன் இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கற்றல் என்பது சோர்வை ஏற்படுத்தாமல் ஆர்வத்தைத் தூண்டுமாறு அமையவேண்டும்; இனிமையாக இருக்க வேண்டும்.

வாழ்த்துகள்.

**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - IV (Part 1)

**Advisor**

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

**Chairperson**

**Dr. Helen Japa Rose, S.L.**
Asst. Professor in Tamil, Govt. College, Munnar, Idukki

**Experts**

**Dr. N. Neelamohan.**
Principal (Rtd.), Vivekananda College, Agasteeswaram, Kanyakumari.

**Dr. Ayyappan, N.**
Associate Prof. of Tamil, S.T. Hindu College, Nagercoil.

**Members**

**Anishkumar, A.**, LPST, MAILPS, Murukady, Kumily, Idukki.
**Arockiadhas, R.**, PD Teacher, GTHS Mattathukad, Palakkad.
**Eswaran, T.**, LPST, ALPS, Luckham, Munnar, Idukki.
**Manivannan, C.**, PD Teacher (Rtd.), Govt. Tamil LPS Chalai, Thiruvananthapuram.
**Mohamed, D.**, PD Teacher, GUPS RB Kudam, Palakkad.
**Nagendren, S.**, HM, Govt. UPS, Kallar, Munnar, Idukki.
**Sandra Raj, T.**, LPST, Govt. Fort UPS, Manacaud, Thiruvananthapuram.
**Shirly, E.**, PD Teacher, Govt. LPS Ayinkamam, Parassala, Thiruvananthapuram.
**Velankanni, I.**, PD Teacher, Govt. UPS Kannimalay, Munnar, Idukki.

**Academic Co-Ordinator**

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 1 | **வசந்தம்** | |
| | மலை | 8 - 13 |
| | சாரல் | 14 - 19 |
| | வானம் | 20 - 24 |
| அலகு 2 | **பண்புகள்** | |
| | ஒழுக்கம் | 26 - 32 |
| | உழைப்பும் உயர்வும் | 33 - 39 |
| | தொண்டு | 40 - 46 |
| அலகு 3 | **பயணம்** | |
| | சாலை | 48 - 55 |
| | ஊர்திகள் | 56 - 62 |
| | மிதப்பு | 63 - 68 |
| அலகு 4 | **ஒளிவிளக்கு** | |
| | கல்வியரசி | 70 - 74 |
| | கூட்டுறவு | 75 - 78 |
| | நட்சத்திரங்கள் | 79 - 85 |
| | அகரமுதலி | 86 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# வசந்தம்



இயற்கை என்பது மனிதனுக்குக் கிடைத்த கொடையாகும். இவ்வியற்கை மழையாகவும் மலையாகவும் வானமாகவும் பலவிதங்களில் அமைந்துள்ளது. அது எண்ணிலடங்காத அதிசயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நமக்கு மனமகிழ்வையும் தருகிறது. அதனைப் பாதுகாப்போம்! போற்றுவோம்!

# மலை



## பார்க்கலாமா பறம்புமலை?

பறம்புமலை! பறம்புமலை!
பார்க்கப் போவோமா?
பாரிவள்ளல் ஆண்டமலை
பார்க்கப் போவோமா?

குரங்குக் குட்டி ஆட்டம் போடும்!
குயில்கள் வந்து பாட்டு பாடும்!
மரங்கள் பூத்துத் தலையை ஆட்டும்
மயிலி னங்கள் தோகை காட்டும்! (பறம்பு மலை)

குறிஞ்சிப் பூவும் தேன்கொடுக்கும்!
குளிர்ந்த சாரல் காற்று வீசும்!
உறிஞ்சிப் பூவில் தேன்குடித்து
ஓடுந் தேனீ கூடு கட்டும்! (பறம்பு மலை)

முல்லைப் பூவும் பல்லைக் காட்டும்!
வெள்ளி போலே அருவி கொட்டும்!
நல்ல வாழை, மா, பலாவும்
நமக்கு வந்து பழம்கொடுக்கும்! (பறம்பு மலை)

பறம்புமலை ! பறம்புமலை!
பார்க்கப் போவோமா?
பாரிவள்ளல் ஆண்டமலை
பார்க்கப் போவோமா?

– கவிஞர் கிருங்கை சேதுபதி

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்து இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலை வாசித்துப் பிடித்த வரிகளைக் கூறுங்கள்.
- பாடலில் ஒத்த ஓசை உடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- மலைகளில் என்னென்ன உயிரினங்கள் இருப்பதாகக் கவிஞர் கூறுகிறார். எழுதுங்கள்.
- உயிரினங்கள் பற்றி வர்ணித்து எழுதியுள்ள பாடல் அடிகளை எடுத்து எழுதுங்கள்.
  - குரங்குக்குட்டி ஆட்டம் போடும்.
  - ..............................................................
  - ..............................................................
  - ..............................................................
  - ..............................................................
- கவிதையை நிறைவு செய்யுங்கள். பொருத்தமான தலைப்பு கொடுங்கள்.

மேகமது சூழ்ந்திருக்கும்
மேலே உயர்ந்திருக்கும்
அருவிகள் தோன்றிவரும்
அதிலிசை முழங்கிவரும்.
...................................................
...................................................
...................................................
...................................................

மோனை : பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒரே போல் வருவது மோனை ஆகும்.

எ.கா : பறம்பு மலை! பறம்பு மலை!
பார்க்கப் போவோமா?
பாரிவள்ளல் ஆண்டமலை
பார்க்கப் போவோமா?



## மலை வளம்

இயற்கை அமைத்த எல்லைபோல் கேரளத்தின் கிழக்கே மலைத்தொடர்கள் நிரம்பியுள்ளதால், கேரளத்திற்கு மலைநாடு என்ற பெயர் அமைந்தது எவ்வளவு பொருத்தமானது. வானளாவ உயர்ந்த மலைகள், நீலமணி போன்ற நெடிய மலைகள், மலைகளின் உச்சியில் வெண்மேகங்கள்! இளைப்பாறின. அது மலைகளுக்கு வெள்ளாடை போர்த்தியது போல் இருந்தது. மலைகளின் சரிவுப் பகுதிகளில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கின. அது பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சிதான். மலைகளுக்குப் பாதுகாப்புப் போல் அடர்ந்து வளர்ந்த மரங்கள், ஆங்காங்கே நெருக்கமாக நின்ற அகில், சந்தன மரங்கள், வேங்கை மரங்களில் மலர்ந்த புதிய பூக்கள் பொற்காசுகள் போல் அழகு காட்டின. மரங்களும் செடிகளும் கொடிகளும் மலர்களும் நிறைந்த மலைப்பகுதி நிழலின் குளிர்ச்சியின் இருப்பிடமாகும்.

மலைகளின் இடுக்குகள் வழியே வெள்ளி அருவிகள் கீழ் நோக்கிப் பாய்ந்தன. இரு பக்கங்களில் இருந்து பாய்ந்த அருவிகள் ஓரிடத்தில் ஒன்றாக இணைந்து ஓடின. அக்காட்சியானது மலைமகள் வெண்முத்து மாலை அணிந்திருப்பதுபோல் இருந்தது. அருவிகளின் ஓசை காதுகளுக்கு அச்சம் தந்தாலும் அவை பாய்ந்து விழும் காட்சி கண்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தன. மலைகளின் தாழ்வரைகளில் மழைநீரும் அருவிநீரும் காட்டாறாகப் பெருக்கெடுத்து ஓடியது. ஆங்காங்கே நீர்ச்சுழிகள்; அது நீராறல்ல, பூவாறு என்று சொல்லும்படியாகப் பல வண்ணப்பூக்கள் நீரில் மிதந்து சென்றன. ஓடித்திரியும் விலங்குகளும் பாடித்திரியும் பறவைகளும் மலைகளுக்கு உயிரூட்டின. ஐம்புலன்களுக்கும் இன்பமூட்டும் மலைவளத்தை இயற்கையின் பெரும் வரம் என்று கூறவும் வேண்டுமோ!

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து மலைவளம் பற்றிய கருத்துகளைக் கூறுங்கள்.
- பாடப்பகுதியை வாசித்து விடுபட்ட சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
  - கேரளத்திற்கு ........................................ என்ற பெயர் அமைந்தது.
  - மலைகளின் உச்சியில் ....................... இளைப்பாறின.
  - பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் ......................... பூத்துக் குலுங்கின.
  - மலை இடுக்குகள் வழியே ............................ கீழ் நோக்கிப் பாய்ந்தன.
- கீழ் வரும் சொற்களை எதிர்ச்சொற்களுடன் இணையுங்கள்.
  - வானம் x மேல்நோக்கி
  - நறுமணம் x தைரியம்
  - அச்சம் x பூமி
  - புதிய x துர்நாற்றம்
  - கீழ்நோக்கி x பழைய
- கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குங்கள்.

  எ.கா : நகை

  (ந, சி, றி, ப், கை, ரி, தி, பி, டி)
- மலையைப் பாதுகாக்க நம்மால் என்னென்ன செய்ய இயலும் என்பதைக் கூறுங்கள்.
- மலைகளின் பயன்களைப் பற்றிக் குழுவில் கலந்துரையாடிச் சிறு குறிப்பு எழுதுங்கள்.

### மாறாத நிலை

மெல்ல மெல்ல மலையின் மீது ஏறிக் கொண்டிருந்தது ஒரு கரடி மலையை விட்டு இறங்கிக் கொண்டிருந்த முயல் கரடியை நோக்கியது.

"கரடியே! நீ எதற்காக மலையின் மீது ஏறிக் கொண்டிருக்கின்றாய்?" என்று கேட்டது முயல்.

"முயலே! இந்த மலையின் உச்சியில் முனிவர் ஒருவர் இருக்கின்றாராமே? அவரைச் சந்தித்து வரம் வாங்கிட வேண்டும். அதனால் தான் நான் இந்த மலையின் உச்சிக்குப்

பயணத்தை மேற்கொள்கின்றேன்" என்றது கரடி..

"கரடியே! நீ அந்த முனிவரைச் சந்தித்து என்ன செய்வாய்?" என்று கேட்டது முயல்.

"நான் அந்த முனிவரைச் சந்தித்து அவரிடம் வரம் வாங்கப் போகிறேன்" என்றது கரடி.

"என்ன வரம் வாங்கப் போகிறாய்?" என்று கேட்டது முயல்.

"முயலே! நான் அந்த முனிவரைச் சந்தித்து அவரிடம் எனக்குப் பசி ஏற்படாமல் இருப்பதற்கு வரம் கேட்கப்போகிறேன்" என்றது கரடி.

பசி ஏற்படாமல் இருந்தால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டது முயல்.

"முயலே! எனக்குப் பசி ஏற்படாமல் இருந்தால் நான் இந்த உலகத்தில் கவலையில்லாமல் வாழ்வேன். இரை தேடிட வேண்டும் என்ற எண்ணமே எனக்கு ஏற்படாது. இரை தேடும் வேலையினையும் நான் செய்ய வேண்டியதில்லை. எனவேதான் அந்த மாதிரியான ஒரு வரத்தைக் கேட்கப்போகிறேன்" என்றது கரடி.

அதனைக் கேட்ட முயலும், "கரடியே! நானும் அந்த வரத்தைத்தான் அந்த முனிவரிடம் கேட்டேன். அவர் "இயற்கைக்கு ஒத்து வராத இந்த வரத்தினை நான் தரமாட்டேன்! பசி என்பது எல்லா உயிரினங்களுக்கும் உரியது. இதனை



மாற்றி அமைக்க நான் முயற்சிக்க மாட்டேன். அப்படி நான் மாற்றிட மாட்டேன்" என்றவாறு அவ்வரத்தைத் தர மறுத்து விட்டார். அதனால் தான் நானும் மலையினை விட்டு கீழே இறங்கிக் கொண்டிருக்கின்றேன்" என்றது. முயல் இவ்வாறு கூறியதும் கரடியும் அமைதியுடன் மலையை விட்டுக் கீழே இறங்கியது.

– விக்னேஷ்

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- கரடியும் முயலும் மலை ஏறியது போல மலைக்குச் சென்ற அனுபவம் உங்களுக்கும் இருக்குமல்லவா! கூறுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை வாக்கியத்தில் அமையுங்கள்.

  எ.கா : ஆமை – ஆமை மெல்ல மெல்ல நடந்து சென்றது.

  - மலை – ..................................................................................
  - வரம் – ..................................................................................
  - இரை – ..................................................................................
  - பசி – ..................................................................................
- கதையில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? ஏன்? எழுதுங்கள்.
- கதையை வாசித்து முயலும் கரடியும் பேசியதை உரையாடலாக எழுதுங்கள்.
  - முயல் : ..................................................................................
  - கரடி : ..................................................................................
  - முயல் : ..................................................................................
  - கரடி : ..................................................................................
  - முயல் : ..................................................................................
  - கரடி : ..................................................................................
- கரடி, முயலுடன் மலை பேசினால் என்ன பேசியிருக்கும்? கலந்துரையாடி எழுதுங்கள்.
- குழுவில் சேராதது எது? வட்டமிடுங்கள்.
  - வாழை, மா, ஆப்பிள், பலா
  - பென்சில், எழுத்தாணி, பேனா, காகிதம்
  - சிறுமி, சிறுவர், இளைஞர், பெரியவர்
  - நாய், மீன், தவளை, நண்டு



# சாரல்



## மழை

மழையே! மழையே! வா! வா!
வாழ்வின் உயிரே! வா! வா!
உழவர் உன்னை எதிர்ப்பார்த்தே
ஒவ்வொரு நாளும் பேசுகின்றார்! (மழையே!)

ஏரி குளங்கள் நிறைந்திடவும்,
எருமை மாடு களித்திடவும்,
ஊரில் உள்ள வயலெல்லாம்
பச்சைப் பட்டை உடுத்திடவும் (மழையே!)

மரங்கள் செடிகள் தழைத்திடவும்,
மலர்கள் பூத்துச் சிரித்திடவும்,
தெருவில் சிறுவர் தாளாலே
கப்பல் செய்து விட்டிடவும் (மழையே!)

காடு கரம்பு துளிர்த்திடவும்,
காளை மாடு கொழுத்திடவும்,
ஓடை ஆறு கல்லிடுக்கில்
ஓயா திசையை மீட்டிடவும் (மழையே!)

தவளை எல்லாம் ஓயாது
கத்திக் கத்திக் களித்திடவும்,
குவளை பூக்க வண்டினங்கள்
தேனைக் குடித்துப் பாடிடவும். (மழையே!)

– கவிஞரேறு வாணிதாசன்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்து இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலில் வரும் ஒத்த ஓசை உடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- மழையின் நன்மைகளாக ஆசிரியர் எவற்றைக் கூறுகிறார். எழுதுங்கள்.
- சரியான விடையை வட்டமிடுங்கள்.
  - மழையை எதிர்ப்பார்ப்பது யார்?
    - உழவன்
    - குயவன்
    - நெசவாளி
  - ஏரி, குளங்கள் எவ்வாறு இருந்தன?
    - குறைந்து
    - வறண்டு
    - நிறைந்து
  - தவளை என்ன செய்தது?
    - கூவியது
    - பாடியது
    - கத்தியது
  - தேனைக் குடித்தது யார்?
    - ஈ
    - வண்டு
    - பட்டாம் பூச்சி

| | | |
|---|---|---|
| எதுகை | : | பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒரே போல் வருவது எதுகை ஆகும். |
| எ.கா | : | மழையே! மழையே! வா! வா!<br>வாழ்வின் உயிரே! வா! வா!<br>உழவர் உன்னை எதிர்ப்பார்த்தே |

## மழையின் வரலாறு

தம்பி! நான் இன்றி இம்மண்ணுலகில் பயிர்கள் இல்லை. பயிர்கள் இல்லையெனில் உயிர்கள் இல்லை. அவ்வளவு முக்கியமானவன் நான். என் பெயர் மழை. என் வரலாற்றைக் கூறுகிறேன் கேள்.

ஆறு, ஏரி, குளம் குட்டைகளில் உள்ள நீரெல்லாம் சூரியனின் வெப்பத்தால் ஆவியாகி மேகமாக மாறுகிறது. அந்த மேகத்தின்

மேல் குளிர்ந்த காற்று படும்பொழுது நான் மழையாக மாறி மண்ணில் பெய்கின்றேன்.

என்னுடைய சிறப்பை இலக்கியங்கள் போற்றிப் பாராட்டுகின்றன. வான் புகழ் வள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில் இரண்டாவது அதிகாரமாக 'வான் சிறப்பு' என்னும் தலைப்பின் மூலம் என் சிறப்புகளைப் பேசியுள்ளார்.

சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம் பாடிய இளங்கோவடிகள் 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்று என்னைப் பாராட்டியுள்ளார்.

"மாரியல்லது காரியமில்லை", "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை" என்னும் பொன்மொழிகள் என் சிறப்பை விளக்கவே எழுந்தவை.

நான் இந்த உலக மக்களுக்கு உயிர் போன்றவன். நான் பெய்யவில்லையென்றால் இம்மண்ணில் பயிர்கள் வளராது. பயிர்கள் இல்லையென்றால் உயிர்கள் வாழாது. என் பயனைக் கருதியே என்னை அணைகளில் தேக்கி வைக்கிறார்கள். நான் மண்ணில் ஊறிப் போவதால் பூமிக்கு அடியில் வாழும் சில உயிர்கள் பிழைக்கின்றன.

வீடுகளைக் கட்டுவோர் தங்கள் மனைகளில் கிணறு வெட்டி என்னைப் பயன்படுத்துகின்றனர். சிறப்பாகச் சொன்னால் நான் வள்ளல் என்று என்னைப் பெருமையாகக் கூறிக் கொள்வேன்.



மரங்களை வெட்டுவதால் நான் கிடைக்காமல் போய் விடுகிறேன். எனவே, தயவு செய்து மரங்களை வெட்டாதீர்கள்.

தம்பி! என்னைப் போல் நீயும் இந்தச் சமூகத்திற்குப் பயன்பட வேண்டும். அதற்காகத்தான் நான் என் வரலாற்றை உனக்குக் கூறினேன். சரி நான் போய் வருகிறேன். நன்றி

– அருணா

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து மழையின் வரலாற்றைக் கூறுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.
  - "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று மழையைப் பாடும் காப்பியம் எது?
  - திருக்குறளில் எந்த அதிகாரத்தில் மழையைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
  - யார் இல்லையென்றால் உயிரினங்கள் வாழாது?
  - சூரிய வெப்பத்தால் தண்ணீர் எவ்வாறு மாறுகிறது?
- மழை தொடர்பான பொன் மொழிகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- சரியான பொருளை இணைத்து எழுதுங்கள்.
  - மாரி – கொடையாளி
  - வான் – வீடு
  - வள்ளல் – வானம்
  - மனை – மழை
- பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.
  - ------------------- பெய்யாவிடில் உயிர்கள் வாழாது. (மலை, மழை)
  - நீரை ---------------- களில் தேக்கி வைக்கின்றனர். (அனை, அணை)
  - திருவள்ளுவர் __________ என்னும் தலைப்பில் மழையைச் சிறப்பாகப் பேசியுள்ளார். (வான் சிறப்பு, வாண் சிறப்பு)
- மழை தன்வரலாற்றைக் கூறியது போல, மரம் தன்வரலாறு கூறுவதை எழுதுங்கள்.
- மழை பெய்யவில்லை எனில் என்ன நிகழும் எழுதுங்கள்.

## ஒப்புரவு ஒழுகு

பரனூரில் நாச்சிமுத்து என்ற பெரியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மாபெரும் செல்வந்தர். இரக்க குணம் உடையவர். ஊர்மக்கள் தங்களின் நியாயமான தேவைகளை அவரிடம் கூறி உதவி பெற்று வந்தனர். அதனால் அவ்வூரில் அந்தப் பெரியவருக்கு அதிக மதிப்பும் மரியாதையும் இருந்தது.

ஒருநாள் அந்த ஊரில் பலத்த இடியுடன் கூடிய மழை பெய்தது. ஊர் விவசாயிகளின் நிலங்களில் நீர்ப்புகுந்தது. பயிர்கள் எல்லாம் நீரில் மூழ்கின. வீடுகளிலும் வெள்ளம் புகுந்தது. உயிர் தப்பித்தால் போதும் என நினைத்த மக்கள் பாதுகாப்பான இடம் நோக்கி நகர்ந்தனர். அவர்களுடைய உடமைகள் யாவும் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. அவர்கள் பசியால் வாடினர்.



இச்செய்தி அந்த ஊர்ப் பெரியவரான நாச்சிமுத்துவின் காதுகளுக்கு எட்டியது. உடனே அவர் சமையல்காரர்களை வரவழைத்து உணவு சமைக்கச் செய்து அனைவருக்கும் வழங்கினார். அவருடைய வீடு அரண்மனை போன்று இருந்தது. வெள்ளம் வடியும் வரை அவர்கள் அனைவரையும் தன் வீட்டிலேயே தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தார். அவர்கள் குளிரால் நடுங்காமல் இருக்க கம்பளிப்போர்வைகளை

வழங்கினார். அதனால் மக்கள் அவருக்குத் தங்கள் மனமார்ந்த நன்றிகளைக் கூறினர். மேலும் நாச்சிமுத்து, அரசாங்கத்தின் பல உதவிகளையும் அந்த மக்களுக்குப் பெற்றுத்தந்தார். அந்த ஊரின் எல்லையில் பெரிய கற்களைக் கொண்டு தடுப்புச்சுவர் எழுப்ப ஏற்பாடு செய்தார். அதனால் ஆபத்துக்காலத்தில் மக்களுக்கு உதவி செய்ததற்கான உயர்ந்த விருதை அரசாங்கம் அவருக்கு அளித்துச் சிறப்பித்தது.

– தமிழ்ப் பிரியன்

## செயல்பாடுகள்

- கதையை நன்றாக வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- சேர்த்தெழுதுங்கள்
  - பள்ளி + கூடம் = ..............................................
  - ஊர் + பெரியவர் = ..............................................
  - கம்பளி + போர்வை = ..............................................
  - தடுப்பு + சுவர் = ..............................................
- கீழ்க் காணும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - வாழ்ந்து ..........................................................................
  - பெரியவர் ..........................................................................
  - மூழ்கியது ..........................................................................
  - விருது ..........................................................................
- சரியா (✓) தவறா (✕) அடையாளமிடுங்கள்.
  - பெரியவர் ஆபத்துக்காலத்தில் மக்களுக்கு உதவி செய்தார்.
  - அவருடைய வீடு குடிசை போலிருந்தது.
  - சாரல் மழையில் பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்தது.
  - அரசாங்கம் அவருக்கு உயரிய விருதை வழங்கியது.
- நாச்சிமுத்து ஊர்மக்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்தார்? எழுதுங்கள்.
- நீங்கள் பிறருக்கு உதவி செய்திருப்பீர்களல்லவா? அதனைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்.
- மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாக்க என்னென்ன முன் எச்சரிக்கைகள் எடுக்கலாம். கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.



# வானம்



## நட்சத்திரங்கள்

நீல வானத்துச் சித்திரமே
நீண்ட இரவின் விசித்திரமே
காலம் முழுதும் எண்ணியும்
கணக்கில் வராத அதிசயமே!

சிதறிய சில்லறைக் காசுகளா
சிந்திய வெண்மணி சிப்பிகளா
உதறிய மல்லிகை மொட்டுகளா
உடைந்த வளையல் துண்டுகளா?

கார்த்திகை தீப அகல் விளக்கோ
மின்னல் சிதறிய சிறு நெருப்போ
காஞ்சிப் பட்டுப் புடவையிலே
கலந்திடும் ஜரிகை வரிசைகளோ?

சின்னக் குழந்தையின் புன்சிரிப்போ
சிதறிய மத்தாப்பூ சிதறல்களா
ஒளிவிடும் வைரச் சிறு கல்லோ
உண்மையில் நீ யார் சொல்லிவிடு!

– கமலா கந்தசாமி

## செயல்பாடுகள்

- கவிதையை மெட்டமைத்துக் குழுவாகவும் தனியாகவும் பாடுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- கவிஞர் நட்சத்திரத்தை எவ்வாறெல்லாம் வர்ணிக்கிறார். கூறுங்கள். எழுதுங்கள்.
- கவிதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பு கொடுங்கள்.

சின்ன சின்ன நட்சத்திரமே
சிங்கார நட்சத்திரமே
வானத்திலே இருக்கிறாய்
..............................................................................................
..............................................................................................



## கூட்டுக்குள் ஒரு நிலா

ஒரு தென்னை மரத்தின் கீற்றில் தூக்கணாங்குருவி ஒன்று கூடு கட்டி வாழ்ந்து வந்தது.

அதற்கு இரண்டு குருவிக் குழந்தைகள் இருந்தன. இரண்டும் பிறந்து ஒரு வாரம் தான் ஆகி இருந்தது.

தாய்க் குருவியும் தகப்பன் குருவியும் பகலில் வெளியே பறந்து சென்றன. வரும்போது சின்ன சின்னப் பூச்சிகளையும் புழுக்களையும் தம் வாயில் கௌவி வந்து தம் குழந்தைகளுக்கு ஊட்டின. குழந்தைகள் அவற்றை உண்டு மகிழ்ச்சியாக வளர்ந்து வந்தன.

காலையிலும் மாலையிலும் காற்றுச் சில்லென்று வீசியது. அதனால் தென்னை மரத்தின் கீற்றுகள் சலசலவென்று உல்லாசமாக அசைந்தன. கீற்று அசையும்போது குருவிக்கூடும் அசைந்தது. குழந்தைகள் மகிழ்ந்தன. "அம்மா! நம் கூட்டை அசைத்து விடுவது யார்?" என்று கேட்டன.

"காற்று மாமா தான்!" என்றது தாய்.

இரவு வந்தபோது வானத்தில் நிலா தகதகவென்று ஒளி வீசியது.



நிலா வெளிச்சத்தில் பூமி மிக அழகாக இருந்தது. நிலாவின் ஒளிபட்டு அந்தத் தென்னை மரத்தின் கீற்றுகள் மின்னின. தூக்கணாங் குருவியின் கூட்டுக்கு உள்ளேயும் நிலா ஒளி பாய்ந்தது.

குருவிக் குழந்தைகள் வியப்படைந்து தம் தாயிடம் கேட்டன.

"அம்மா! நம் கூட்டுக்குள் குளிர்ச்சியாகவும் வெளிச்சமாகவும் உள்ளதே! அது என்ன?" அதற்குத் தாய்க்குருவி சொன்னது. "அது தான் நிலா! உலகத்துக்கே இரவு விளக்கு அது தான்!" என்றது. "அது எங்கே அம்மா? நிலா எப்படி இருக்கும்? நாங்கள் பார்க்க வேண்டுமே!" என்றன குழந்தைகள். "அதோ, தூரத்தில் மின்னுகிறதே! அதுதான் நிலா!" என்றது தாய்.

குருவிக் குழந்தைகள் கூட்டின் சிறிய இடைவெளி வழியாக வானத்தில் நிலாவைப் பார்த்தன. "ஆகா! எவ்வளவு அழகு! எவ்வளவு அழகு!" என்று குருவிக் குழந்தைகள் ஒன்றோடு ஒன்று பேசிக் கொண்டன. நிலாவைப் பார்த்தபடியே பிறகு அவை உறங்கி விட்டன.

– கவிஞர் நண்டு மாமா

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்
- கதையில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? கூறுங்கள்.

- இரு சொல் ஆக்குங்கள்.
    - ❖ தாய்க்குருவி – ........................., .........................
    - ❖ சில்லென்று – ........................., .........................
    - ❖ வியப்படைந்து – ........................., .........................
- கதையில் நிலவை ஆசிரியர் எவ்வாறு வர்ணித்துள்ளார் என்பதைக் குறிப்பாக எழுதுங்கள்.
- மறுநாள் காலையில் கண்விழித்த போது குருவிக் குழந்தைகள், அம்மாவிடம் அம்மா! நிலாவைக் காணவில்லை எனக் கேட்டிருந்தால். தாய் என்ன கூறியிருக்கும்? எழுதுங்கள்.

## விடுகதை

- வட்ட வட்டத் தட்டு வானில் தோன்றும் தட்டு
  வெள்ளை நிறத் தட்டு விருப்பம் ஊட்டும் தட்டு – அது என்ன?
- எண்ணெய் இல்லாத விளக்கு எலக்ட்ரிக் விளக்கல்ல! – அது கண்ணைப் பறிக்கும் விளக்கு கடையில் வாங்கா விளக்கு ! – அது என்ன?
- அறிவின் ஒரு பெயர் அதுதான். இரவில் வருவதுவும் அதுதான். இனிய தமிழின் மொழியில் இயம்புவாய் நீ! என்ன அது?
- ஆனை ஏறாத மலையிலே ஆடு ஏறாத மலையிலே
  ஆயிரம் பூப் பூத்திருக்கு ! – அது என்ன?
- இரவெல்லாம் பூக்காடு
  பகலெல்லாம் வெறுங்காடு ! – அது என்ன?
- என்னைச் சுற்றி தீ! – நான்யார்?
- கோடி கோடி வெள்ளிப் பணம்
  ஓடி விடுவது காலைப் பயணம்! – அது என்ன?
- அலை அலையாய் ஆடிவரும், கடலும்
  அல்ல! நிலையாக இருக்காது, நிலவும் அல்ல! – அது என்ன ?
- விண்ணைச் சிரிக்கச் செய்வான்
  கண்ணைப் பறிக்கச் செய்வான் – அவன் யார் ?
- கடலிலே பிறந்த கன்னிப்பெண் காற்றிலே மிதப்பாள்
  வானத்தில் சுற்றுவாள் நெஞ்சம் குளிர்த்தாலோ
  நிலத்திலே குதித்திடுவாள்! – அவள் யார்?

முழுநிலா, சந்திரன், மதி (நிலா), விண்மீன், வானம்,
சூரியன், நட்சத்திரம், மேகம், மின்னல், மழை.

–ஸ்ரீமதி எஸ். லட்சுமி

## செயல்பாடுகள்

- விடுகதைகளை வாசித்துப் பொருத்தமான விடைகளைக் கண்டுபிடியுங்கள். எழுதுங்கள்.
- நூலகத்திலிருந்து விடுகதைகளைத் திரட்டிக் குழுவாக விடுகதைப் போட்டி நடத்துங்கள்.
- விடுகதைகளைத் திரட்டித் தொகுப்பு உருவாக்குங்கள்.
- மாதிரியைப் போன்று விடுகதை உருவாக்குங்கள்.

எ.கா : வட்டமாக இருப்பேன் குளித்து எழுந்தால் என் உடல் எல்லாம் கொப்பளம். நான் யார்?



- ........................................................................................
  ........................................................................................



- ........................................................................................
  ........................................................................................



- ........................................................................................
  ........................................................................................



- ........................................................................................
  ........................................................................................



- ........................................................................................
  ........................................................................................



- ........................................................................................
  ........................................................................................



- ........................................................................................
  ........................................................................................





## அலகு 2

# பண்புகள்



சமூகத்தில் குழந்தைகள் நற்பண்புகள் உடையவர்களாக வளரவேண்டும். உழைப்பின் மேன்மையையும் தொண்டு செய்யும் மனப்பான்மையையும் சிறுவயது முதலே குழந்தைகள் பழக்கமாக்கிக் கொண்டால் மட்டுமே சிறந்த சமூகம் உருவாகும்.

# ஒழுக்கம்



## பண்பு

தெருநடுவில் கல்கிடந்தால் சின்னத்தம்பி – நீ
தெருவோரம் போட்டிடுவாய் சின்னத்தம்பி
கொடுக்கும் பொருள் வாங்கியதும் சின்னத்தம்பி – நீ
கொடுத்தவர்க்கு நன்றிசொல்வாய் சின்னத்தம்பி

பேருந்தில் செல்கையிலே சின்னத்தம்பி –நீ
பெரியவர்க்கு இடங்கொடுப்பாய் சின்னத்தம்பி
முதியவர்கள் வழிகடக்க சின்னத்தம்பி – நீ
முடிந்தவரை உதவிடுவாய் சின்னத்தம்பி

ஆசானைப் பார்த்திட்டால் சின்னத்தம்பி – நீ
அவருக்கு வணக்கம் செய் சின்னத்தம்பி
பெற்றோரை மதித்திட்டால் சின்னத்தம்பி– நீ
பெருமைபல பெற்றிடுவாய் சின்னத்தம்பி

படிப்பதுவும் ஒழுக்கமும்தான் சின்னத்தம்பி – உனை
பண்புள்ள ஆளாக்கும் சின்னத்தம்பி
நற்பண்பைக் கற்றால்தான் சின்னத்தம்பி –நீ
நல்லவனாய் ஆகிடலாம் சின்னத்தம்பி

– முனைவர் ஆ. ஜீவானந்தம்

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் மெட்டமைத்துப் பாடுங்கள்.
- கவிதையில் உங்களுக்குப் பிடித்த வரிகள் எவை? காரணம் என்ன? கூறுங்கள்.
- முதலாம் எழுத்து, இரண்டாம் எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்
- பாடலில் சிறுவர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார். சொல்லுங்கள்.
- கவிதையை வாசித்துக் கருத்துகளை எழுதுங்கள்.

### உதவி

ஓர் அடர்ந்த காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த நரியின் காலில் சிறிய முள் ஒன்று குத்தியது. இரண்டு நாட்களாகத் தன் காலில் குத்திய முள்ளை எடுக்க முடியாமல் வலியால் துடித்துக் கொண்டிருந்தது. நரியின் குகைக்கு அருகில் உள்ள புதரைத்தான் முயல்கள் காலம் காலமாகத் தங்களின் வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தன.

நரி தினம்தோறும் அந்த முயல் கூட்டத்திலிருந்து ஒவ்வொரு முயலாகக் கொன்று தின்று தன் பசியைத் தீர்த்துக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது. முயல்கள் நரிக்குப் பயந்து உணவு தேட வெளியில் செல்லாமல் புதருக்குள்ளேயே அடைந்து கிடந்தன. இதனால் குட்டி முயல்கள் பசியால் வாடின. எத்தனை நாள்தான் இப்படி நாமும் நம் பிள்ளைகளும் பசியால் வாடுவது! என்று கூறிக்கொண்டு நான்கைந்து முயல்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு உணவு தேடப் புறப்பட்டது.



தலைவன் முயல், நரி என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள புதருக்குள் இருந்து தலையை மட்டும் வெளியில் நீட்டி நோட்டமிட்டது.

நரி ஒரு மரத்தின் அடியில் படுத்திருப்பதைக் கண்ட தலைவன் முயல், அது வயிறு முட்ட சாப்பிட்டுவிட்டு நல்லா தூங்குகிறது. இதுதான் நல்ல சமயம். அந்த நரி விழித்துக் கொள்வதற்குள் நாம் உணவு தேடிக் கொண்டு சீக்கிரம் புதருக்குள் திரும்ப வேண்டும். ம்... சீக்கிரம் வாருங்கள்.

"மெதுவா..... மெதுவாகக் காலை எடுத்து வையுங்கள். அந்த நரி முழித்துக் கொள்ளப் போகிறது" எனக்கூறியது. அப்போது நரிக்குக் காலில் வலி அதிகமானதால் அது ஊளையிடத் தொடங்கியது. நரி நம்மைப் பார்த்துத் தான் ஊளையிடுகிறது என்று முயல்கள் அனைத்தும் பயத்தில் நடுங்கி சிலையாய் நின்றன. நரியின் ஊளை சத்தம் இன்னும் அதிகமானது.

"நரிக்கு ஏதோ ஆபத்து. அது உயிருக்குப் போராடிக்கொண்டிருக் கிறது என்று நினைக்கிறேன்" என்றது தலைவன் முயல்.

"ஆமாம். எங்களுக்கும் அப்படித்தான் தோன்றுகிறது." முயல்கள் மெதுவாக நரியை நெருங்கின. நரியின் காலில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நரி வலியால் துடித்துக் கொண்டிருந்தது. தலைவன் முயல் மற்ற முயல்களிடம் மூலிகை இலையைப் பறித்து வரச் சொன்னது.

நாம் ஏன் இந்த நரிக்கு உதவி செய்யணும்? நம் இனத்திலிருந்து எத்தனை முயல்களைக் கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல்



கொன்று தின்றிருக்கிறது. இப்போது கூட இந்த நரிக்குப் பயந்து கொண்டு நாமும் நம் பிள்ளைகளும் எத்தனை நாள் பசியால் வாடினோம்? இந்த நரியை இப்படியே விட்டுவிட்டால் நாம் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழமுடியாது" என்றன மற்ற முயல்கள். பேசுறதுக்கு இப்ப நேரம் இல்ல, சீக்கிரம் போய் மூலிகை இலையைக் கொண்டு வாங்க என்று சற்று கோபத்தோடு கூறியது தலைவன் முயல். தலைவனின் பேச்சை மறுக்க முடியாமல் மூலிகை இலையைப் பறித்து வந்து கொடுத்தன. மூலிகை இலையைக் கசக்கிச் சாறுபிழிந்து நரியின் காலில் வைத்துக் கட்டு போட்டுவிட்டது தலைவன் முயல். இப்போது சற்று வலி குறைந்ததை நரி உணர்ந்தது.

நரியால் இப்பொழுது எழுந்து நிற்கவும் முடிந்தது. ஒருவர் உயிருக்குப் போராடும் போது நம்மால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்ய வேண்டும் எனக்கூறித் தன் கூட்டத்தை அழைத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தது. தனது தவறை உணர்ந்த நரி வெட்கத்தில் தலை குனிந்து நின்றது.

– பாட்டிகதைகள்

## செயல்பாடுகள்

- கதையை வாசித்து அதன் கருத்தைக் கலந்துரையாடிக் கூறுங்கள்.
- முயல்கள் நரிக்கு உதவியது போல நீங்களும் பிறருக்கு உதவி செய்திருப்பீர்களல்லவா? கூறுங்கள்.
- இணைத்தெழுதுங்கள்.
  - தினம் + தோறும் = ..............................................
  - மரம் + அடியில் = ..............................................
  - நான்கு + ஐந்து = ..............................................
  - சாறு + பிழிந்து = ..............................................
- எதிர்ச்சொல் எழுதுங்கள்.
  - மகிழ்ச்சி × ............................
  - சிறிய × ............................
  - சீக்கிரம் × ............................
  - சத்தம் × ............................
- சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.
  - நரிக்குப் பயந்து உணவு தேடாமல் இருந்தது யார்? ...................
    (மான், யானை, முயல், குரங்கு)
  - வலி தாங்கமுடியாமல் ஊளையிட்டது எது? .............................
    (சிங்கம், நரி, குதிரை, கரடி)

- ❖ நரியின் காலில் குத்தியது எது? ................................
  (கல், முள், குச்சி, ஈட்டி)
- ❖ நரி எங்கே படுத்து இருந்தது? ..............................
  (பாறை, காடு, குகை, மரத்தின் அடியில்)

❍ வெட்கத்தில் தலை குனிந்த நரி என்ன கூறியிருக்கும் எழுதுங்கள்.

## ஓ! இவர்கள் இப்படி! நீ எப்படி?

அகிலா : டேய் அருண்! என் பென்சில் எங்கே?

அருண் : போ! எனக்குத் தெரியாது!

அகிலா : என் பெட்டியில்தான் வைத்திருந்தேன். காணோம் தேடிக் கொடு!

அருண் : நான் ஏன் தேட வேண்டும்? என்னால் முடியாது!

அகிலா : நீ என் பென்சிலை எடுத்தாயா?

அருண் : நான் எடுக்கவில்லை! என்னிடம் கேட்காதே!

அகிலா : ஏனிப்படி கத்துகிறாய்? அப்படி என்ன நான் தப்பாகக் கேட்டுவிட்டேன்.

அருண் : தப்போ… சரியோ… அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. என்னால் முடியாது… முடியாது அவ்வளவுதான்.

அகிலா : வகுப்பறையில் என்னருகே வலப்புறம் இருப்பவன் நீ. உன்னிடம்தானே முதலில் கேட்க முடியும். கேட்டது தப்பா?

அருண் : திரும்பத் திரும்ப சொன்னதையே சொல்லிக் கொண்டிராதே. நான் உனக்கு வேலைக்காரனா? அதற்கு வேறு ஆளைப்பார்.





அகிலாவும் அருணும் உரையாடியதைப் படித்தீர்கள் அல்லவா! இனி காவ்யாவும் இனியனும் எப்படிப் பேசுகிறார்கள் என்று பார்ப்போம்.

காவ்யா : இனியன்! என் பேனாவை இந்தப் பெட்டியில்தான் வைத்திருந்தேன்! இப்போது காணோமே!

இனியன் : காவ்யா! நன்றாகத் தேடிப்பார்த்தாயா?

காவ்யா : உம். ஆசிரியர் வரும் நேரம் ஆகிவிட்டது. எனக்கு உதவி செய்ய முடியுமா?

இனியன் : இது என்ன பெரிய காரியமா? நானும் தேடுகிறேன் … காவ்யா.. இதோ பார்! உன் பேனா மேசைக்கடியில் விழுந்து கிடக்கிறது.

காவ்யா : மிகவும் நன்றி! இனியன்.

இனியன் : நானென்ன பெரிதாகச் செய்துவிட்டேன்? இதற்குப்போய் பெரிய பெரிய வார்த்தைகளைச் சொல்கிறாயே?

காவ்யா : அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. நன்றி மறப்பது நன்றன்று. சிறியதோ பெரியதோ பிறர் செய்த உதவியை ஒருபோதும் மறக்கக் கூடாது. மதிக்க வேண்டும்.

இனியன் : நீ சொல்வது உண்மைதான்.

காவ்யா : எங்கள் அம்மா அடிக்கடி சொல்வார்கள். அன்போடு இருக்க வேண்டும். பண்போடு பழக வேண்டும். சரிதானே?

இனியன் : நூற்றுக்கு நூறு சரி.

– வசந்தகுமாரி

## செயல்பாடுகள்

- உரையாடலை வாசியுங்கள். நீங்கள் புரிந்து கொண்டது என்ன? கூறுங்கள்.
- உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் யார்? ஏன்? கூறுங்கள்.

- சரியா (✓) தவறா (✗) அடையாளமிடுங்கள்.
  - பொய் பேசக்கூடாது.
  - பிறருக்கு உதவக் கூடாது.
  - பெரியவர்களை மதிக்க வேண்டும்.
  - பண்போடு பழகக்கூடாது.
  - செய்த உதவியை மறக்க வேண்டும்.

- இனியன், காவ்யா போன்று நீங்கள் நடந்து கொண்டதுண்டா? உங்கள் அனுபவத்தை எழுதுங்கள்.

காலம் மூன்று வகைப்படும். அவை

1. இறந்தகாலம் 2. நிகழ்காலம் 3. எதிர்காலம்.

இறந்தகாலம் என்பது ஒரு செயல் முடிந்ததைக் குறிப்பதாகும். நிகழ்காலம் என்பது ஒரு செயல் நடந்துகொண்டிருப்பதைக் குறிப்பதாகும். எதிர்காலம் என்பது ஒரு செயல் நடக்க இருப்பதைக் குறிப்பதாகும்.

எ.கா:

- அருண் வந்தான் – இறந்தகாலம்
- அருண் வருகிறான் – நிகழ்காலம்
- அருண் வருவான் – எதிர்காலம்

- சரியான சொல்லை அடைப்புக்குள் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(ஓடுவேன், வரைகிறேன், பெற்றாள், வைத்தேன், வருவேன், செல்கிறான்)

- பென்சிலை இந்தப் பெட்டியில் ...................... எனக் காவ்யா கூறினாள்.
- நான் பள்ளிக்கு நாளைச் சீக்கிரமாக...............
- நான் இப்பொழுது படம் ......................................
- யாழினி போட்டியில் வெற்றி ............................
- கண்ணன் வீட்டிற்குப் பேருந்தில் ...................
- நாயைப் பார்த்தால் பயந்து ................................



# உழைப்பும் உயர்வும்



## புதையல்

முதுமையடைந்து விட்ட ஒரு விவசாயிக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் படுசோம்பேறிகள். பயிர்த்தொழிலிலோ வேறு தொழிலிலோ நாட்டமில்லாமல் தண்டச்சோறு தின்று வளர்ந்தவர்கள்.

ஒருநாள் விவசாயி தனது இரு புதல்வர்களையும் அழைத்து, "என் மக்களே! நான் இன்னும் இரண்டொரு தினங்களில் இறந்து போவேன். இதுவரை நான், கடும் உழைப்பினால் நமது நிலத்தில் பாடுபட்டு உங்களுக்குச் சோறுபோட்டேன். உழைப்பையே அறியாத நீங்கள் இனி எப்படிப் பிழைக்கப் போகிறீர்களோ?" என்று கவலையோடு கேட்டார்.

இதைக் கேட்டதும் அந்த இரு சோம்பேறிகளும் கண்ணீர் விட்டு அழுதனர். தகப்பன் சாகப் போவது பற்றிக்கூட அவர்கள் கவலைப்படவில்லை. இனிமேல் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? என்கிற வருத்தம் அவர்களுக்கு.

அழுது கொண்டிருக்கிற புதல்வர்களைத் தேற்றிய விவசாயி,"பயப்பட வேண்டாம். நீங்கள் வாழ்நாளெல்லாம் மகிழ்ச்சியாக இருப்பதற்குப் போதுமான செல்வத்தைச் சேர்த்து வைத்திருக்கிறேன். அதை நமது புஞ்சையில் ஓர் இடத்தில் ஆழத்தில் புதைத்து வைத்துள்ளேன். தோண்டி எடுத்துக் கொள்ளுங்கள். மகிழ்ச்சியாக வாழ்வீர்கள்" என்று சொல்லிவிட்டு மரணமடைந்தார்.



சோம்பேறி வாலிபர்கள் இருவரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மறுநாள் புதையலைத் தேடும் பணியில் மும்முரமாக ஈடுபட்டார்கள். இரவும் பகலும் ஓய்வில்லாமல் மண்வெட்டியால் நிலத்தை ஆழமாக வெட்டினார்கள். குறிப்பாக இந்த இடத்தில் என்று சொல்லப்படாததால் அவர்கள் புஞ்சை முழுவதும் தோண்டிப்பார்க்க வேண்டியதாகிவிட்டது.

தளர்ச்சியடையாமல் நிரை நிரையாகக் கிளறினார்கள். நிலம் முழுவதும் தோண்டிப் பார்த்தாகி விட்டது. ஊ...ஹும்! புதையல் தென்படவேயில்லை.

ஏமாற்றம் அடைந்த அவர்களுக்கு விவசாயி மேல் கோபம் வந்தது. மனம் போனபடி தாறுமாறாகத் திட்டித் தீர்த்தார்கள்.

அந்தச் சமயம் திடீரென்று நல்ல மழை பெய்தது. ஊர் மந்தையில் நன்கு ஆழமாகக் கிளறிப் போடப்பட்டுள்ள கரிசல் நிலத்தைப் பார்த்த பக்கத்து நிலத்து விவசாயிகள் சோம்பேறி இளைஞர்களிடம் "தம்பிகளே, நல்ல பருவமழை பெய்திருக்கிறது; நிலமும் நன்கு கிளறிப் பக்குவப்பட்டுள்ளது. இதில் பருத்திப் பயிர் செய்யுங்கள்" என்று விதைகளைக் கொடுத்து வற்புறுத்தினார்கள். அவர்கள் இருவரும் அரை மனதுடன் விதைகளை ஊன்றினார்கள்.

பருத்திச் செடிகள் முளைத்துச் செழித்து வளர்ந்து காய்த்துக் குலுங்கின. வெடிக்கத் தொடங்கின.

விளைச்சல் சக்கைப் போடு போட்டுவிட்டது. பருத்தியை விற்ற பணம் ஆயிரத்துக்குமேல் கிடைத்தது. மகிழ்ச்சி



மிகுதியால் மறுபடியும் மறுபடியும் அந்தப் பணத்தை எண்ணிக்கொண்டிருந்தார்கள். மூத்தவனிடம் இளையவன் கேட்டான்:

"அண்ணா, நம்ம அப்பா சொன்ன புதையல் கிடைச்சுட்டது, இல்லையா?"

ருசிகண்ட அவர்கள் தொடர்ந்து உழைத்துப் பலன் என்ற புதையலை மகிழ்ச்சியாக அனுபவித்து வாழ்ந்து வந்தார்கள்.

– வீர வேலுசாமி

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- தந்தை மகன்களுக்குக் கூறிய அறிவுரைகள் என்ன? கூறுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - புதல்வர் – ....................................
  - மகிழ்ச்சி – ....................................
  - புஞ்சை – ....................................
  - புதையல் – ....................................
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - இரவும் பகலும், நிரை நிரையாய், மறுபடியும் மறுபடியும்.
- உங்களுக்குப் புதையல் கிடைத்து இருந்தால் நீங்கள் என்ன செய்து இருப்பீர்கள்? எழுதுங்கள்.
- கதையை உரையாடல் வடிவில் எழுதி நடித்துக் காட்டுங்கள்.



## விளையும் பயிர்

நாஞ்சில் நாட்டில் ஒரு சிறிய பள்ளிக்கூடம் இருந்தது. அங்கு வயதுக்கு மீறிய அறிவாற்றலும் தமிழாற்றலும் பெற்ற மாணவன் ஒருவன் இருந்தான்.

வயது மிகக் குறைவாக இருந்தாலும் தமிழில் பாடல்கள் இயற்றும் அளவுக்கு அவன் திறமை பெற்றிருந்தான். ஒரு நாள் அந்த மாணவன் அரிய தமிழ்ப்பாடல் ஒன்றை இயற்றினான். அந்தப் பாடலைத் தமிழறிஞர் யாரிடமாவது காண்பித்து அதிலுள்ள குற்றங் குறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவனுக்கு ஆவலாக இருந்தது.

அவன் வகுப்பாசிரியரே நல்ல தமிழறிஞர். அவரிடம் காண்பிக்கலாமா என்று யோசித்தான். அதில் தவறு இருக்குமோ! என்று அஞ்சி ஒரு தந்திரம் செய்தான்! மறுநாள் வகுப்புக்குச் சற்று முன்னதாக வந்து தான் எழுதிய பாடலை ஆசிரியரின் மேசை மீது வைத்து விட்டு வகுப்பை விட்டு வெளியே போய் விட்டான். வகுப்பினுள் பிரவேசித்த ஆசிரியர், மேசை மீது ஒரு தாள் இருப்பதைக் கண்டார்.

அதில் ஒரு தமிழ்ப்பாடல் எழுதப்பட்டிருந்தது. அப்பாடலை மனத்திற்குள்ளாகப் படித்துப் பார்த்தார். பாடலின் நடையழகு, சொல்லாட்சி, கருத்தழகு ஆகியவை ஆசிரியரின் மனதைக் கவர்ந்தது. அத்தகைய அரிய பாடலை ஒரு மாணவன் எழுதியிருப்பான் என்று ஆசிரியரால் நினைக்கவே முடியவில்லை.

"இந்தச் சீட்டை யார் கொண்டு வந்து கொடுத்தது?" என்று வினவினார் ஆசிரியர். "வகுப்புக்குள் வெளியார் யாருமே வரவில்லை" என்று மாணவர்கள் ஒருமித்த குரலில் கூறினர்.



"இந்தத் தாளில் உள்ள பாடலை எழுதியது யார்? என்று கேட்டார் ஆசிரியர். தாங்கள் யாரும் எழுதவில்லை என்று மாணவர்களில் பெரும்பான்மையினர் கூறிவிட்டனர். பாடலை எழுதிய மாணவன் வாயே திறக்கவில்லை.

ஆசிரியர் அந்தப் பாடலை வகுப்பில் மாணவர்களிடம் இசையுடன் பாடிக் காண்பித்தார். "இது ஓர் அற்புதமான பாடல். இதை யார் எழுதியிருந்தாலும் அவர் ஒரு சிறந்த தமிழறிஞர் என்பதில் ஐயமே இல்லை. அவர் யாராக இருந்தாலும் அவருக்கு என் பாராட்டுகள்" என்று ஆசிரியர் பாராட்டியபோது நமது மாணவனின் உள்ளத்தில் ஏற்பட்ட பெருமிதத்துக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையே இல்லை.

என்றாலும் மாணவன் வாய் திறந்து அந்தப் பாடலை எழுதியது நான்தான் என்று கூற விரும்பவில்லை.

தமக்குக் கிடைத்த பாராட்டுதலை மௌனமாக அடக்கமாகப் பிறர் அறியாமல் ஏற்றுக் கொண்டான் மாணவன்.

இந்த மாணவ மணிதான் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்ற பெயரால் தமிழ் நிலம் சிறக்க வாழ்ந்தவர்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசியுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.
- இரு சொல்லாக்குங்கள்
  - அறிவாற்றல் = ........................ + ........................

- ❖ தமிழாற்றல் = ........................ + ........................
- ❖ தமிழறிஞர் = ........................ + ........................
- ❖ சொல்லாட்சி = ........................ + ........................

❍ உங்களுக்குத் தெரிந்த தமிழ்க் கவிஞர்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள். எழுதுங்கள்.

❍ வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

- ❖ ஆசிரியரின் மேசை மீது என்ன இருந்தது?
- ❖ பாடலில் ஆசிரியரின் மனதைக் கவர்ந்தது எவை?
- ❖ ஆசிரியர் யாரைப் பாராட்டினார்?
- ❖ கவிதையை எழுதிய மாணவனின் பெயர் என்ன?

❍ கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி கவிமணி பற்றி குறிப்பு எழுதுங்கள்.

| | |
|---|---|
| ❖ இறப்பு 1954 செப்டம்பர் 26 | ❖ பிறப்பு ஜூலை 27, 1876 |
| ❖ தேசிக விநாயகம் பிள்ளை | ❖ குழந்தைக் கவிஞர் |
| ❖ பெற்றோர்கள் | ❖ சிவதாணு பிள்ளை ஆதிலட்சுமி |
| ❖ தேரூர் குமரி மாவட்டம் | ❖ கவிமணி |

❍ உங்களுக்கும் பாராட்டுக் கிடைத்த அனுபவம் இருக்குமல்லவா? அதைக் குறிப்பாக எழுதுங்கள்.

❍ நூலகத்திலிருந்து கவிமணி எழுதிய கவிதைகளைத் திரட்டித் தொகுப்பு உருவாக்குங்கள்.

## சர். சி. வி. இராமன்

இந்திய நாட்டில் ஒரு ஞானி
இராமன் என்னும் விஞ்ஞானி
செந்தமிழ் நாட்டில் பிறந்தவராம்
சிந்தனையாலே வளர்ந்தவராம்

வெந்ததைத் தின்று விதியென்றே
வாழும் இந்த நாட்டினிலே
நொந்த மக்கள் வியந்திடவே
நோபல் பரிசு பெற்றாராம்.

புத்தம் புதிய விஞ்ஞானப்
புதுமை ஒளியின் சிதறல்கள்!
எத்தனை ஆய்வுகள் இவர்செய்தார்
'இராமன் விளைவு' எனப் பெயரே!

நித்தமும் அறிவியல் ஆய்வுக்கு
நேரம் இன்றி உழைத்தாராம்
மெத்தப் படித்த இளைஞர்களை
மேன்மை யடைய அழைத்தாராம்!

நன்செய் செழிக்கும் தஞ்சையிலே
நல்ல ஊராம் மாங்குடியில்
அன்ன வர்தாம் பிறந்தவராம்
அறிவி யலிலே சிறந்தாராம்

இன்னும் உலகம் புகழ்கின்ற
எங்கள் நாட்டு விஞ்ஞானி
முன்னால் இவர்போல் முன்னேற
முயற்சி செய்க சிறுவர்களே!



– உதயை மு.வீரையன்

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- கவிதையை வாசித்து சர்.சி.வி. இராமனைப் பற்றிக் கூறுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - வியந்து – ..............................................................
  - மெத்த – ..............................................................
  - ஆய்வு – ..............................................................
  - மேன்மை – ..............................................................
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - ஒளி – ..............................................................
  - ஆய்வு – ..............................................................
  - மேன்மை – ..............................................................
  - புதுமை – ..............................................................
- சர்.சி.வி. இராமனைப் பற்றிக் கூடுதல் தகவல்களைச் சேகரித்துக் குறிப்பு தயாராக்குங்கள்.



# தொண்டு



## "சாரணம் வென்றிடக் கும்மியடி"

சாரணர் என்கிற போதினிலே நல்ல
சாந்தம் பிறக்குது நெஞ்சினிலே – அதனைக்
காரணம் கூறிக் கும்மியடி – எங்கும்
சாரணம் வென்றிடக் கும்மியடி (சாரணம்)

தேடக் கிடைக்காத தெள்ளமுதம் – எங்கள்
பேடன் பவுலாரின் சாரணமாம்! – இதை
ஊரெங்கும் பரவிடக் கும்மியடி –இந்தப்
பாரெங்கும் போற்றிடக் கும்மியடி!

நம்பத் தகுந்தவன் சாரணனே – என
நானிலம் பேசிடக் கும்மியடி! – இங்கு
நல்லவர் யாவரும் உடன்பிறப்பே – என
நாடுகள் போற்றிடக் கும்மியடி!

இனமொழி வேற்றுமை இல்லாதவன் –என
எண்திசை கூறிடக் கும்மியடி! – நல்ல
குணமதில் என்றென்றும் மேலானவன் – எனக்
குவலயம் போற்றிடக் கும்மியடி!

விலங்குகள் நண்பன் சாரணனே! – என
விளங்கிட நாளெல்லாம் கும்மியடி!–நல்ல
சிக்கன வாழ்விலும் சாரணனே – எனப்
பொற்கரம் தட்டியே கும்மியடி. (சாரணம்)

– கோ. பெரியண்ணன்

## செயல்பாடுகள்

- பாடலை இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலைக் குழுவாகயிருந்து பாடியும் நடனமாடியும் மகிழுங்கள்.
- சாரண இயக்கத்தைப் பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார்? சொல்லுங்கள்.
- சாரண இயக்கம் உங்கள் பள்ளியில் இருக்கிறதா? தொண்டு செய்யும் இயக்கங்களைப் பட்டியல் இடுங்கள். அதைப் பற்றிக் கூறுங்கள். அதில் ஏதேனும் ஒன்றைப்பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த கும்மிப்பாடலை எழுதிப் பாடி மகிழுங்கள்.
- பேடன்பவுல் பற்றித் தகவல் சேகரித்துக் குறிப்பு எழுதுங்கள்.



## உதவும் கரங்கள்

பிறருக்குத் தொண்டு செய்ய வேண்டும். அது மனிதப் பிறவியின் கடமைதான்.

அந்தத் தொண்டினை என்றிலிருந்து தொடங்குவது?

எப்படித் தொடங்குவது?

பள்ளிச் சிறுவர்களாகிய நாங்கள் என்ன தொண்டு செய்ய முடியும்? என்ற வினாக்கள் எழும்.

படிக்கும் பருவத்திலேயே தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்து வருவது சிறப்பாகும்.

படிக்கும்போதே தொண்டு செய்வதற்கான வாய்ப்பு வருமேயானால் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பிறருக்குத் தொண்டு செய்வது என்றால், பொருளால் செய்கின்ற தொண்டுதான் தொண்டு என்று கருதத் தேவையில்லை.

இனிமையான சொற்களையே பேசி மற்றவர் மனம் இன்பமாக இருக்க வாய்ப்பினை உருவாக்குவதும் தொண்டுதான். உங்கள் நண்பர்களில் யாரேனும் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தாலும், "நண்பா! உன் உடல் நலம் தற்போது எவ்வாறுள்ளது? மருந்து சாப்பிட்டு வருகின்றாயா? வருந்தாதே. விரைவில் குணம் பெறுவாய்!" என்று ஆறுதல் கூறுவதும் கூட சிறந்த தொண்டுதான்.

நெருக்கடி மிகுந்த சாலையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம். சாலையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்ல வேண்டும் என்ற நிலையில் தடுமாறிக் கொண்டிருக்கும் வயது முதிர்ந்தவரையோ அல்லது சிறுவனையோ நாம் கை கொடுத்து அழைத்துச் சென்று சாலையின் மறுபுறத்தைச் சென்றடையும்படி செய்தோமானால் அது சிறந்த தொண்டுதான்.

பழக்கூடையோ காய்கறிக் கூடையோ கொண்டு செல்லும் போது, அதிலிருந்து பழங்களோ, காய்கறிகளோ தரையில் சிதறி ஓடுகிறபோது கைகொட்டிச் சிரித்து வேடிக்கைப் பார்ப்பதை



விட்டுவிட்டு, நம்மால் இயன்றவரை சிதறிய பொருட்களைப் பொறுக்கியெடுத்துக் கொடுப்பதும் தொண்டுதான்.

தொண்டு என்பது பொருளால் செய்வது மட்டுமா? இல்லையே! நம்மால் இயன்ற அளவில் இயன்ற இடங்களிலெல்லாம் உதவிகளைச் செய்து வருவதே தொண்டு.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கலந்துரையாடுங்கள்.
- குழுவில் சேராததை வட்டமிடுங்கள்.
  - உதவி, பெருமை, தொண்டு
  - தானம், கொடை, ஆடம்பரம்
  - ஏளனம், அன்பு, பாசம்
  - ஆறுதல், அரவணைப்பு, துன்புறுத்தல்
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - தொண்டு – ..................................
  - பருவம் – ..................................
  - வாய்ப்பு – ..................................
  - வேடிக்கை – ..................................
- உங்கள் நண்பர்களில் யாரேனும் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் "நண்பா! உன் உடல் நலம் தற்போது எவ்வாறுள்ளது? மருந்து சாப்பிட்டு வருகின்றாயா? வருந்தாதே, விரைவில் குணம் பெறுவாய்" என்று ஆறுதல் கூறுவதும் கூட சிறந்த தொண்டுதான்.

  இதுபோன்று தொண்டு செய்த அனுபவம் உங்களுக்கு உண்டா? அனுபவக்குறிப்பு எழுதுங்கள்.

### நல்ல கல்வி

குழுப் படிப்பு முறையினை ஆசிரியை அறிமுகப்படுத்தி இருந்தார். எல்லா மாணவிகளும் தத்தமது குழுவுடன் சேர்ந்து படித்தபடி இருந்தனர்.

இது நாளும் தொடர்ந்தது.

அடுத்து வந்த தேர்வில் எல்லா மாணவிகளும் நல்ல மதிப்பெண்களை எடுத்திருந்தனர்.

ஆசிரியை குழுத்தலைவிகளைப் பெரிதும் பாராட்டினார்.



அன்று மாலை.

மாணவிகள் பள்ளி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது சரளா தனத்திடம்.

"தனம் எனக்கு நீ ஓர் உதவி செய்வாயா? என்று கேட்டாள்.

"என்னால் முடிஞ்ச உதவியைச் செய்யறேன்" என்றாள் தனம்.

"தனம்... நான் உன் கூட தினமும் சேர்ந்து படிச்சா இன்னும் சிறந்த மாணவியாக வருவேன்" என்றாள்.

"உண்மைதான்"

"ஆனால் நான் உன் வீட்டுப் பக்கமா இல்லையே? நான் ஒரு பக்கம் இருக்கேன். நீ வேற பக்கம் இருக்கே ".

"நான் என்ன செய்யணும்?"

"தினமும் பள்ளி முடிஞ்சதும் வகுப்பறையிலேயே உட்கார்ந்து என்னோட நீ படிக்கணும். தினமும் ஒரு மணி நேரம் ஒதுக்கினா போதும். உன் புண்ணியத்தால் நானும் நல்லாப் படிப்பேன்" என்றாள்.

தனம் புன்னகையுடன்,

"நாளைக்கே ஆரம்பிக்கலாம். நான் இன்னிக்கே எங்க அம்மாகிட்ட பேசி சம்மதம் வாங்கிடறேன்" என்றாள்.

மறுநாள் மாலை, பள்ளி முடிந்ததும் வகுப்பறையிலேயே அமர்ந்து படிக்கத் தொடங்கினர்.

இவர்கள் படிப்பது மாலதிக்குப் பிடிக்கவில்லை. அவள் தனத்திடம்

"தனம் இப்படி வச்சுக்க, அவ நல்லாப் படிக்கற மாணவியா இருந்து, நீ சுமாரா படிக்கற மாணவியா இருந்தா அவ உனக்கு உதவுவாளா?"

"நிச்சயமா உதவுவா"

"எப்படிச் சொல்றே?"

"மாலதி... சரளா படிப்பில்தான் சுமாரான மாணவி. மற்றபடி பல கலைகளில் அவ சிறந்தவ தெரியுமா? பலவிதமான கைத் தொழில்களும் அவளுக்கு அத்துப்படி" என்றாள் தனம்.

அவளை ஆச்சரியமாகப் பார்த்தபடி நின்றாள் மாலதி.

தனம் தொடர்ந்தாள்.

"அந்தக் கலைகளை எனக்குச் சொல்லித் தாரியான்னு கேட்டேன். அதுக்குச் சரளா என்ன சொன்னா தெரியுமா" என்றாள்.

"என்ன சொன்னா?"

"எந்தக் கலையும் ஒரே ஒருவர் ஆண்டு அனுபவிக்கறதுக்காக இல்லை. காலம் காலமா நிலைச்சு இருக்கணும்னா அது பலருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அது நல்லதொரு கலையாக இருக்க முடியும்.

எனக்குக் கற்றுத் தர்றேன்னு சொன்னதோட கற்றுக் கொடுக்கவும் செய்தாள்" என்று நிறுத்தினாள்.

மாலதி அமைதியாக அவளையே பார்த்தாள்.

"என்னோட கல்வியும் அப்படித்தான். நல்ல கல்வியா இருந்தா பலருக்கும் பயன்படணும். அதனால்தான் சரளா கேட்டப்ப நான் ஒத்துக்கிட்டேன்" என்றாள்.

மாலதிக்குப் புரிந்தது.

"தனம், உன்னோட உயர்வான குணத்தை நான் பாராட்டறேன்.



அதோட, இனி நானும் என் கல்வியை நல்ல கல்வியாக்க என்னாலான எல்லா முயற்சிகளையும் செய்வேன்" என்றாள்.

அவள் மாற்றத்தைப் புன்னகையுடன் வரவேற்றாள் தனம் .

மாலதி அதோடு நின்று விடவில்லை. அன்று முதல் குழுப் படிப்பிற்கு மதிப்பளித்தாள். சுமாராகப் படிக்கும் பல மாணவிகளுக்கு உதவி புரிய ஆரம்பித்தாள்.

தனம், மாலதி இருவரது தன்னலமற்ற சேவையினைக் கண்டு ஆசிரியையும் மனம் மகிழ்ந்தார். மற்ற மாணவிகள் முன்னால் இருவரையும் பாராட்டி மகிழ்ந்தார்.

– சிவ பாரதி

## செயல்பாடுகள்

- கதையை நன்றாக வாசித்துக் கலந்துரையாடுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.
- கதையில் வருவது போன்ற அனுபவம் உங்களுக்கு உண்டா? கூறுங்கள்.
- பன்மை தொடராக மாற்றி எழுதுங்கள்.
  - மரத்தில் பறவை இருந்தது

    ..................................................................................................................

  - நாய் விரைவாக ஓடியது.

    ..................................................................................................................

  - கலா படம் வரைந்தாள்.

    ..................................................................................................

  - பசு புல் மேய்ந்தது.

    ..................................................................................................

  - காட்டில் விலங்கு வாழ்ந்தது.

    ..................................................................................................

  - ஆடு புல் மேய்ந்தது.

    ..................................................................................................

- கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுங்கள்.

  கிடைத்தது, காலம், கேட்டேன், கலை, கொடுக்கவும், கீறியது, கூறினேன், குதித்தேன்.

- கதையை வாசித்து நாடக வடிவில் எழுதி நடித்துக்காட்டுங்கள்.



அலகு 3

# பயணம்




மனிதனின் வாழ்க்கையை எளிமைப்படுத்தியதில் சாலையும் போக்குவரத்தும் முக்கிய காரணிகளாகும். சாலை, போக்குவரத்து இவற்றின் நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பது நமது உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பைத் தரும்.

# சாலை



## பார்த்துப் போ தம்பி

பார்த்துப் போ தம்பி – நன்றாய்ப்
பார்த்துப் போ தம்பி.
பள்ளிக் கூடம் செல்லும் போது
பார்த்துப் போ தம்பி.

மோட்டார் வரும், ஜட்கா வரும்
மூர்க்க மாக லாரிவரும்.
ஆட்டோ ரிக்ஷா படப டென்றே
அலறிக் கொண்டே ஓடிவரும். (பார்த்துப்)

தெருவில் குறுக்கும் நெடுக்கு மாகச்
செல்லல் தீமை ஆகும் தம்பி.
விரைந்தே ஓடும் வண்டி யாலே
விபத்து நேரக் கூடும் தம்பி. (பார்த்துப்)

சாலை நடுவே நின்று பேசல்
தப்பு, தப்பு, தப்பு தம்பி.
நாலு பேராய்க் கையைக் கோத்து
நடந்து போக வேண்டாம் தம்பி. (பார்த்துப்)

பாதித் தூரம் வலது பக்கம்
பார்த்துச் சாலை கடப்பாய்த் தம்பி.
மீதித் தூரம் இடது பக்கம்
மேலும் பார்த்துச் செல்வாய்த் தம்பி. (பார்த்துப்)

சாலை ஓரம் நடந்து சென்றால்
சங்கடங்கள் இல்லை தம்பி.
சாலை விதிகள் தெரிந்தவர்க்குச்
சற்றும் கவலை இல்லை தம்பி.

– அழ. வள்ளியப்பா

## செயல்பாடுகள்

- கவிதையை வாசித்து இராகத்துடன் பாடுங்கள்.
- கவிதையில் சாலைவிதிகளைக் குறித்து கவிஞர் என்ன கூறுகிறார்? எழுதுங்கள்.
- கவிதையை முழுமையாக்குங்கள்.

ஆகாயத்தில் ஓர் ஊர்தி
அதிக விரைவாய்ச் செல்வதைப் பார்!
பயங்கரச் சத்தம் போடுதுபார்!
உலகம் சுற்றப் போகுது பார்!
..............................................................
..............................................................
..............................................................
..............................................................

- சரியா (✓) தவறா (×) என அடையாளமிடுங்கள்.
  - சாலையில் இடதுபுறம் நடக்க வேண்டும்.
  - வாகனம் ஓட்டுபவர் வலது புறம் செல்ல வேண்டும்.
  - சாலையைக் கடக்கும்போது வரிக்கடவை வழியாகச் செல்ல வேண்டும்.
  - சிவப்பு விளக்கு எரியும்போது வாகனங்கள் செல்ல வேண்டும்.

## சாலை விதிகள்

சாலைகள் மக்களின் நடமாட்டத்திற்கும் வாகனங்களின் போக்குவரத்துக்கும் உதவுகின்றன. ஆனால் சில நேரங்களில் கவனக் குறைவினால் விபத்துகள் நடந்து விடுவதுண்டு.

மக்கள் பெருக்கம் அதிகமாகி வரும் இக்காலத்தில் விபத்துகளின் எண்ணிக்கையும் பெருகி வருகின்றன. இத்தகைய விபத்துகள் நேராமலிருக்க சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று வகுத்துள்ளனர். அதுவே சாலை விதிகள் எனப்படும்.

சாலைகளில் வாகனங்களை ஓட்டிச் செல்பவர்களுக்கும் நடந்து செல்பவர்களுக்கும் தனித்தனியே விதிகள் உள்ளன. அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய விதிமுறைகளின்படி நடந்தால் சாலை விபத்துகள் நேராதவாறு தவிர்க்கலாம்.

சாலைகளில் சைக்கிள்களில் செல்பவர்கள் பரவலாகச் செல்லக் கூடாது. ஒருவர் பின் ஒருவராகத்தான் செல்ல வேண்டும். பெரிய சாலைகளில் பலதரப்பட்ட வாகனங்கள் செல்லும். அந்தச் சாலைகளில் சைக்கிள்கள் செல்வதற்கென்று ஓரமாக ஒரு பகுதியை ஒதுக்கியிருப்பர். அந்தப் பகுதியில் தான் சைக்கிள்கள் செல்ல வேண்டும்.

சாலையில் ஒன்றுடன் ஒன்று முந்தாமலும் சாலை விதிகளுக்குட்பட்டும் செல்ல வேண்டும்.

வாகன ஓட்டிகள் சென்று கொண்டிருக்கும் போது ஒரு புறம் திரும்ப வேண்டியிருப்பின் பின்னால் வரும் வாகனங்களுக்குச் சைகைகள் மூலம் அறிவித்து விட வேண்டும். அதைப் போன்று ஏதோ ஒரு காரணம் கருதி நிறுத்த வேண்டி இருந்தாலும் பின்னால் வரும் வாகனங்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

நடந்து செல்பவர்கள் நடைபாதையிலேயே செல்ல வேண்டும். ஒரு புறத்திலிருந்து மறுபுறம் கடக்க வேண்டுமாயின்,







வரிக்கடவை போட்டிருக்கும் இடத்தில் வண்டிகள் வராத நேரத்தில் கடக்க வேண்டும்.

சில இடங்களில் அதற்கென்று வரிக்கடவை குறிக்கப்பட்டிருக்கும். அந்த இடங்களில் மட்டும் சாலையின் இரு புறங்களையும் கவனித்துவிட்டுப் பின் கடக்கவேண்டும்.

பல இடங்களில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் காவலர்கள் இருப்பர். ஒரு சில இடங்களில் போக்குவரத்தைச் சீர்ப்படுத்த வண்ண விளக்குகள் இருக்கும். அவை இடும் கட்டளைகளைக் கவனித்து நடக்க வேண்டும்.

அத்துடன் சாலைகளில் ஆங்காங்கே பின்பற்ற வேண்டிய குறிப்புகள் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கும். அவற்றையும் கவனித்து அதற்கேற்ப நடக்க வேண்டும்.

– கொம்பு. ஆறுமுகம்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கலந்துரையாடுங்கள். கூறுங்கள்.
- சரியான சொல்லை எடுத்து எழுதுங்கள்.
  - அவன் .......................... கடந்து சென்றான். (சாளையைக், சாலையைக்)
  - நான் ..............................படித்தேன். (அறையிலிருந்து, அரையிலிருந்து)

- ❖ எனது சட்டையில் ......................... படிந்திருந்தது. (கரை, கறை)
- ❖ நேற்று .........................பெய்தது. (மளை, மழை)

❍ எதிர்ச்சொல் எழுதுங்கள்.

- ❖ இடது புறம் × ...............................
- ❖ பெரிய சாலை × ...............................
- ❖ பின்னால் × ...............................
- ❖ நில் × ...............................
- ❖ ஏழை × ...............................

❍ பாடப்பகுதியை வாசித்து வினாக்கள் தயார் செய்து வினாப்போர் நடத்துங்கள்.

❍ அட்டவணைப்படுத்துங்கள்.

நீர்மூழ்கிக் கப்பல், ரயில், பேருந்து, விமானம், மிதிவண்டி, வேகப்படகு, வான்குடை, ஹெலிகாப்டர், கப்பல், ஏவுகணை, ஆட்டோ, படகு, விண்கலம், இரு சக்கர வாகனம், போர்விமானம், மிதவை, வானூர்தி, கார், ராக்கெட்.

| தரையில் செல்லும் வாகனங்கள் | நீரில் செல்லும் வாகனங்கள் | ஆகாயத்தில் செல்லும் வாகனங்கள் |
|---|---|---|
| | | |

## டம்ரூ

சமீப காலமாக அசோகவனத்தில் விபத்துகள் அதிகமாக நிகழ்ந்து வந்தன. எனவே அதிகரித்து வரும் விபத்துகளின் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் வகையில் சாலைப் பாதுகாப்பு குறித்த பேனர்கள், சுவரொட்டிகள் எங்கும் ஒட்டப்பட்டன. வனத்தில் வசிப்பவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

அதைப் படித்துப் பார்த்த டம்ரூ கழுதை, இனிமேல் நான் இந்த விளம்பரங்களில் அதிக கவனம் செலுத்துவேன். எப்போதும் சாலையில் இருப்பதைத் தவிர்க்க முயற்சிப்பேன் என்று கூறிக்கொண்டது. அன்று அது நடந்து சென்று கொண்டிருந்த

போது, திடீரென ஏதோ சத்தம் வரவே எட்டிப் பார்த்தது. அப்போது நண்பரே! யாரைத் தேடுகிறீர்கள்?" என்று பின்னால் இருந்து ஒரு குரல் வந்தது. உடனே டம்ரூ திரும்பிப் பார்த்தது. அங்கே ஜாம்பி குரங்கு நின்றது. உடனே ஜாம்பியிடம் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என டம்ரூ கேட்டது. அதற்கு நான் குதிரைபோல ஆரோக்கியமாக இருக்கிறேன் என ஜாம்பி உற்சாகமாகக் கூறியது. அதன்பின் சிறிது நேரம் பேசிவிட்டு, ஜாம்பி தன் வழியில் சென்றது. சற்று நேரம் கழித்து, ஜாம்பி திரும்பியபோது, டம்ரூ அதே இடத்தில் நிற்பதைக் கண்டதும் வியப்பு மேலிட்டது. "டம்ரூ. நீ ஏன் இன்னும் அங்கே நிற்கிறாய்? என்ன விஷயம்?" ஜாம்பி கேட்டது.

"நான் சாலையைக் கடக்கக் காத்திருக்கிறேன்" "சாலையைக் கடக்க ஏன் தாமதம். இதில் யோசிக்க என்ன இருக்கிறது?" ஜாம்பி, ஆச்சரியத்துடன் கேட்டது.

அதற்கு டம்ரூ "வாகனங்கள் கடந்து செல்லக் காத்திருக்கிறேன்" என்றது.

டம்ரூ சொன்னதும் அதைக்கேட்ட, ஜாம்பி சிரித்துக் கொண்டே, "வாகனங்கள் சென்ற பிறகுதான் சாலையைக் கடக்க முடியும் என்று யார் சொன்னது?"

"சாலை பாதுகாப்புப் பிரச்சாரத்தின் போது சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தது," என டம்ரூ பதில் அளித்தது.

"நீ மிகவும் அப்பாவியாக இருக்கிறாய் டம்ரூ" எனக் கூறி ஜாம்பி குதித்துக் குதித்துச் சிரித்தது.

"அப்பாவி அல்ல. டம்ரூ முற்றிலும் முட்டாள், இல்லையெனில் சாலையோரத்தில் யாராவது நிப்பாங்களா" எனப் பேடி நரி



கிண்டல் செய்தது. "பேடி. அப்படியெல்லாம் எதுவும் இல்லை, அது போக்குவரத்து விதிகளைச் சரியாகப் பின்பற்றுகிறது என்றது ஜாம்பி.

ஓ... போக்குவரத்து விதிகள் இதில் வேறு என்ன கண்டுபிடித்தாய்?" பேடி கிண்டல் செய்தவாறே மீண்டும் கேட்டது.

"சாலையைக் கடக்கும்போது, நாம் எப்போதும் இடது மற்றும் வலதுபுறமாகப் பார்க்க வேண்டும். சாலையின் வலது பக்கத்தில் நடக்க வேண்டும்" "அது மட்டுமின்றி, சாலையை எப்போதும் ஜீப்ரா கிராசிங்குகள் வழியாகக் கடக்க வேண்டும். வாகனங்களை முதலில் கடந்து செல்ல அனுமதிக்க வேண்டும்" என டம்ரூ விளக்கம் தந்தது.

"பேடி, உனக்கு இது புரியவில்லை. சாலையில் நடக்கும்போது நமது பாதுகாப்பு நம் கையில்தான் இருக்கிறது. போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைபிடிக்கணும். நம்மை மட்டும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள முடியாது. மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என ஜாம்பி விளக்கம் தந்தது.

இப்போது நீயும் மாறிட்டே. உன்னிடம் பேசுவதும் தவறு என்று கூறிப் பாக்கெட்டிலிருந்து ஹெட் ஃபோனை எடுத்துக் காதில் அணிந்து கொண்டது பேடி.

'பேடி நீ ஹெட்ஃபோன்களை வைத்துக்கொண்டு நடப்பதும் சாலையில் நடந்து செல்லும்போது இசையைக் கேட்பதும் பேசுவதும் ஆபத்தானது என்றது ஜாம்பி.



எதையும் கேட்காமல் சாலையைக் கடக்க ஆரம்பித்தது பேடி. அப்போது "அங்கேயே நில் பேடி! பச்சை சிக்னல் உள்ளது. இப்போது நீ சாலையைக் கடக்கக்கூடாது" என டம்ரூ கூறியதைப் பேடி கேட்கவில்லை. அதே நேரம் பேடி சாலையின் நடுப்பகுதியை அடைந்தபோது, ஒரு கார் மின்னல் வேகத்தில் வருவதை அனைவரும் பார்த்தனர் "சாலையை விட்டு வெளியே வா!" என டிரைவர் கூச்சலிட்டார். சத்தமாக ஹாரன் அடித்தார். பேடி ஹெட்ஃபோன் வைத்திருந்ததால் எதையும் கேட்க முடியவில்லை.

கார் அபாயகரமாக அருகில் வந்து பேடி மீது மோதியது. உடனே, பேடி அடிபட்டுக் கீழே மயங்கி விழுந்தது. பின்னர் பேடியை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். சுயநினைவு இல்லை. நண்பர்களுக்குக் கவலை ஏற்பட்டது சிறிது நேரம் கழித்து லேசாக கண் திறந்தப் பேடி. நீங்கள் சொன்னதைக் கேட்காததால் நான் மருத்துவமனையில் படுத்திருக்கிறேன் என வருத்தத்துடன் கூறித் தன் தவறை உணர்ந்து கொண்டது.

– விவேக் சக்கிரவர்த்தி

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்து கூறுங்கள்.
- கதையில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? காரணத்தைக் கூறுங்கள். எழுதுங்கள்.
- தொடரிலுள்ள எழுத்துப் பிழைகளை நீக்கிச் சரியாக எழுதுங்கள்.

  பேடி உணக்கு இது புறியவில்லை. சாளையில் நடக்கும்போது நமது பாதுகாப்பு நம் கையில்தான் இறுக்கிறது. போக்குவறத்து விதிகலை முரையாகக் கடைப்பிடிக்கணும். நம்மை மட்டும் பாதுகாப்பாக வைத்துக்கொல்ல முடியாது. மற்றவர்கலையும் பாதுகாப்பாக வைத்திறுக்க வேண்டும்.
- குழுவில் சேராதது எது? வட்டமிடுங்கள்.
  - கார், ஜீப், கப்பல், பேருந்து.
  - நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள்.
  - ஓட்டுநர், நடத்துநர், லோகோபைலட், பைலட்.
- சாலையைக் கடக்கும்போது எவ்வாறு செல்ல வேண்டும் என டம்ரூ கூறியது. எழுதுங்கள்.
- பேடிக்கு விபத்து ஏற்படக் காரணம் என்ன? கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.



# ஊர்திகள்



## கப்பல்

நீரில் மிதந்தே செல்லும் கப்பல்!
நீண்ட தொலைவு கடக்கும் கப்பல்– மக்கள்
ஏறிப் பயணம் செய்யும் கப்பல்!
எல்லா வசதிகள் நிறைந்த கப்பல்!

போரில் எதிரியை வீழ்த்தும் கப்பல்!
பொருட்களை அதிகம் சுமக்கும் கப்பல்–திட
வீர மாலுமி உள்ள கப்பல்!
விசையில் சீருடன் இயங்கும் கப்பல்!

திடீரென மூழ்கிச் சாயும் கப்பல்!
தினம் ஒவ்வொருஊர் போகும் கப்பல்–காந்த
திசைக்காட் டிக்கருவி யுள்ள கப்பல்!
தெற்றெனப் புகையைக் கக்கும் கப்பல்!

காற்றைப் புயலை எதிர்க்கும் கப்பல்!
கடலுக் கழகு சேர்க்கும் கப்பல்–உரிய
கொடிகளை மேலே ஏற்றும் கப்பல்!
குறைவிலாச் சுகமே அளிக்கும் கப்பல்!

– கோ.ஜெயச்சந்திரன்

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- முதல் எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- கவிதையில் கப்பலின் சிறப்புகளைக் கவிஞர் எவ்வாறு கூறுகிறார். சொல்லுங்கள். எழுதுங்கள்.
- முதல் எழுத்தை மாற்றிச் சொல் உருவாக்குங்கள்.
  - திசை – இசை, ஆசை, தோசை
  - பணம் – ...................., ...................., ....................
  - புகை – ...................., ...................., ....................
  - சுகம் – ...................., ...................., ....................
  - கருவி – ...................., ...................., ....................

## ஊரைச் சுத்திப் பார்ப்போமா!

சுண்டெலி, பூனை, நாய்க்குட்டி மூவரும் நண்பர்கள். எப்போதும் சேர்ந்தே இருப்பார்கள்.

ஒருநாள் மூவரும் ஒன்றுகூடிப் பேசினார்கள்.

"இந்தக் கிராமத்தில் இருக்கிறது ரொம்ப அலுப்பா இருக்கு. எந்த வசதியுமில்லே. ஆனா, நகரத்தில் எல்லா வசதிகளும் இருக்கிறதாச் சொல்றாங்க. நாம மூணு பேரும் ஒருவாட்டி நகரத்திற்குப் போகணும்!" என்றது சுண்டெலி.

"நகரத்திற்குப் போகணும்னா இங்கிருந்து ரொம்பத் தொலைவு போகணும். நம்மள இரயிலுல யாரும் ஏத்த மாட்டாங்களே...!" என்றது பூனை.

"அதுக்கு நானொரு யோசனை வச்சிருக்கேன்..." என்றபடி சுண்டெலி பூனையின் காதுகளில் கிசுகிசுத்தது.

அடுத்த நாள்,

இரயில் நிலையத்தில் நல்ல கூட்டம்.

ஒரு பாட்டி வைத்திருந்த காய்கறிக் கூடைக்குள் போய் ஒளிந்து கொண்டது பூனை.

பயணி ஒருவரின் சாப்பாட்டுக் கூடைக்குள் போய்ப் பதுங்கிக் கொண்டது சுண்டெலி. இரயில் புறப்படும்போது, பின்னால்

தாவி வந்து, இரயில் பெட்டியின் மேலே ஏறிக்கொண்டது நாய்க்குட்டி.

ஒரு மணி நேர போராட்டத்திற்குப் பிறகு, நகரத்திற்குள் வந்தது இரயில். மூன்றும் தாவிக் குதித்து வெளியே வந்து நகரத்துக்குள் நுழைந்தன. அங்கே எங்குப் பார்த்தாலும் வாகன ஓட்டம், மக்கள் நெரிசல். ஒரே வாகனப் புகை மூட்டம் அதனால் ஒரு சந்துக்குள் ஓடி வந்தன மூன்றும்.

"நாம நகரத்தைப் பத்திக் கேள்விப்பட்டது ஒன்னா இருந்துச்சு. இங்கு வந்துப் பார்த்தா வேற மாதிரியிருக்கே...!" என்று வருத்தப்பட்டது பூனை.

"சரி வந்துட்டோம். என்னதான் இந்த நகரத்தில் இருக்குன்னு சுத்தித்தான் பாப்போமே...!" என்றது நாய்க்குட்டி.

மூன்றும் சந்திலிருந்து மெதுவாக வெளியே வந்தன.

சர்புர்ரென்று வாகனங்கள் சீறிப் பாய்ந்தன. பெரிய பெரிய கட்டிடங்கள் வானுயர உயர்ந்து நின்றன. சாத்தியிருந்த பெரிய கடையொன்றின் வாசலருகே சென்றதும், கதவு தானாகவே திறந்து கொண்டது. அது தானியங்கிக் கதவு.

மூன்றும் உள்ளே நுழைந்தன. குளிர் சாதன வசதி செய்யப்பட்ட அறை குளிர் தாங்காமல் நடுங்கியது சுண்டெலி.

"வெளியே போனா வெயில் வாட்டுது, உள்ளே வந்தா குளிர் நடுக்குது...!" என்றது நாய்க்குட்டி. கடையின் உள்ளே.





எலி, சுண்டெலி, பூனை, நாய்க்குட்டி, புலிக்குட்டி, யானை, சிங்கம் போன்றவை அங்கே அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன.

"அய்... நம்ம நண்பர்கள் இங்கே இருக்காங்களே...!" என்றபடி அவற்றின் அருகே போன பூனை, "அய்யே! இதெல்லாம் பிளாஸ்டிக் பொம்மைகள்...!" என்றது.

கண்காணிப்புக் கேமராவில் இவை மூன்றும் தெரிந்தன.

"சீக்கிரம் அதுங்கள விரட்டுங்க..." என்று மேலாளர் உத்தரவிட, காவலாளி ஒரு கம்பை எடுத்துக்கொண்டு துரத்தினார். தப்பித்தோம் பிழைத்தோமென்று மூன்றும் ஓட்டமெடுத்து வெளியே வந்தன.

"யப்பா, இந்த நகரத்தில் நாம் வாழ இடமே இல்லேயே...!" என்று மூச்சு வாங்கியபடி சொன்னது பூனை.

"யம்மாடி நம்மளால இனிமே ஓட முடியாது. வாங்க பேசாம கிராமத்துக்கே திரும்பிப் போகலாம்..." என்றபடி மூன்றும் இரயில் நிலையத்தைத் தேடிவந்தன.

இந்த மூவரையும் எங்காவது நீங்கள் பார்த்தால், இரயில் நிலையம் எங்கிருக்கிறது என்று வழி சொல்லுங்களேன் – பிளீஸ்.

– மு. முருகேஷ்

## செயல்பாடுகள்

- கதையை நன்றாக வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரத்தைக் கூறுங்கள்? காரணம் என்ன? எழுதுங்கள்.
- நகரத்திற்குச் சென்ற சுண்டெலி, பூனை, நாய்க்குட்டி எதற்காகக் கிராமத்திற்குத் திரும்பி வந்தன. காரணம் என்ன? எழுதுங்கள்.
- அட்டவணையை நிரப்புங்கள்

| கிராமம் | நகரம் |
|---|---|
| ❖ குடிசை வீடுகள் | ❖ பெரிய பெரிய கட்டிடங்கள் |
| ❖ | ❖ |
| ❖ | ❖ |
| ❖ | ❖ |
| ❖ | ❖ |

- நகரத்தில் சுற்றித் திரிந்த சுண்டெலி, பூனை, நாய்க்குட்டி மூவரையும் காவலாளிகள் பிடித்துக் கூண்டில் அடைத்திருந்தால். அவை காவலாளியிடம் எங்ஙனம் கெஞ்சிக் கேட்டிருக்கும் என்பதை உங்கள் கற்பனையில் எழுதுங்கள்.
- கதையை முழுமையாக்குங்கள்

ஓர் அடர்ந்த காடு ........................................ நான்கு நண்பர்கள் மரம் வெட்டச் செல்லுதல் .............................................. சத்தம் கேட்டுப் பயந்தனர் ...............

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

## புகைவண்டிப் பயணம்



சென்னையிலிருந்து கோடைக் காலத்தில் பலரும் ஊட்டிக்குச் செல்வதைப்போல நானும் என் உறவினருடன் ஒருமுறை ஊட்டி செல்ல வாய்ப்புக் கிடைத்தது. முன்னேற்பாடுடன் இருக்கைக்குப் பதிவு செய்ததால் சிரமமின்றி எனக்கு இருக்கை கிடைத்தது. வழிநெடுக டீசல் எஞ்சின் இணைக்கப்பட்ட புகைவண்டி முக்கியமான இடங்களில் மட்டும் நின்று நின்று சென்றது. கழிப்பிட வசதியும் சிற்றுண்டிச் சாலையும் இணைக்கப்பட்டுள்ளதால் வயிறு பசியெடுக்கும் போதும் தாகமாயிருந்த போதும் தேவையானவற்றை வாங்கிக் கொள்ள வசதியாயிருந்தது. சில மணிநேரம் வழிநெடுக உள்ள இயற்கைக் காட்சிகளைப் பார்த்த பின்னர் சற்று ஓய்வெடுத்தேன். படுக்கை வசதியுள்ள பெட்டிகளும் இருந்ததால் படுத்துறங்க வசதியாக இருந்தது.

கண் விழித்தபோது வண்டி கோவை நிலையத்தில் நின்றிருந்தது. ஐந்து நிமிடத்திற்கு மேல் கோவை நிலையத்தில் நின்றதால் கீழிறங்கிச் செய்தித்தாளை வாங்கிப் புரட்டினேன். மீண்டும் புறப்பட ஆயத்தமாகப் பச்சை விளக்கு எரிந்ததும் வண்டியில் ஏறிக்கொண்டேன். வண்டி மேட்டுப்பாளையத்தை நோக்கி விரைந்தது. மேட்டுப்பாளையத்தை அடைந்ததும் ஊட்டி மலை வழிப் பாதைக்கு எனத் தனிப்பட்ட முறையில் பல் சக்கரங்கள் உள்ள புகைவண்டியில் மாறி அமர்ந்து கொண்டேன். மலை மேல் ஏறி செல்வதால் வண்டி சரிந்து விடாமலும் கீழ் இறங்காமலும் இருக்க இந்தப் பல்சக்கர முறையைப் பயன்படுத்தி உள்ளனர். வழி நெடுக மலைகளும் அடர்ந்த காடுகளும் அவற்றில் தாவித் திரியும் குரங்குகளும் பார்ப்பதற்கு மிகவும் இன்பமாய் இருந்தன. திடீரென வண்டி ஒரு குகை வழியாகச் சென்றது. எங்கும் ஒரே கும்மிருட்டு. எதுவுமே தெரியவில்லை. உடனே வண்டியில் உள்ள விளக்குகள் எரிந்தன. ஆனால் இரண்டு மூன்று நிமிடத்திற்குள் சூழ்நிலை

மாறி மீண்டும் வண்டி குகையைத் தாண்டியதும் பகலவன் ஒளி பரவியது. மீண்டும் மனம் மகிழ்வெய்தியது. ஒரு பக்கம் பார்த்தால் நெடிய உயரமான மலையும் மறுபக்கம் ஆழமான பள்ளத்தாக்கும் தென்பட்டன. நாங்கள் சென்ற மலைப்பாதை புகை வண்டி மெதுவாக நகர்ந்து சென்றது. வண்டியின் முன்புறம் எஞ்சின் மீது ஒருவர் அமர்ந்து தம் கையில் உள்ள வண்ணக் கொடிகளை அசைத்த வண்ணம் இருந்தார். திருப்பங்கள் வரும்போது வண்டி மேலும் மெல்ல சென்றது.

புகைவண்டி ஊட்டி நிலையத்தை அடையும் பொழுது பிற்பகல் மூன்று மணியாய் இருந்தது. எனினும் அங்குள்ள குளிர் மிகுந்த சூழ்நிலை மனதிற்கு மிகவும் உற்சாகத்தை அளித்தது.

புகைவண்டிப் பயணம் மிகவும் வசதியாகவும் மனதிற்கு உற்சாகம் அளிப்பதாகவும் இருந்தது. மேலும் இளையோர் முதல் முதியோர் வரை நோயாளிகள் உட்பட யாவரும் பயணம் செய்ய ஒரு நல்ல போக்குவரத்துச் சாதனம் புகைவண்டி தான் என்பதில் ஐயமில்லை.

– சி. இராசியண்ணன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசியுங்கள். கலந்துரையாடுங்கள்.
- சேர்த்து எழுதுங்கள்.
  - கீழ் + இறங்க = ..........................................
  - கோடை + காலம் = ..........................................
  - சிறிய + உண்டி = ..........................................
  - ஓய்வு + எடுத்து = ..........................................
- மாதிரியைப் போன்று வாக்கியம் அமையுங்கள்.

  எ.கா : பச்சை விளக்கு

  பச்சை விளக்கு எரிந்ததும் வாகனங்கள் செல்ல ஆரம்பித்தன.
  - மெதுவாக

    ..........................................................................................
  - உற்சாகம்

    ..........................................................................................
  - வாய்ப்பு

    ..........................................................................................




- பாடப்பகுதியில் உள்ளது போல, நீங்கள் சென்ற ஏதேனும் ஒரு பயண அனுபவத்தை எழுதுங்கள்.

# மிதப்பு



## நீச்சல்

நீந்தத் தெரியாமல் – ஆற்றின்
நிலையும் புரியாமல் – நீர்
சாந்த மென்று நம்பிக் – காலைச்
சட்டென்று வையாதீர் !

வெள்ளப் பெருக்கினிலும் – அருவி
வீழும் இடங்களிலும் – நீர்
துள்ளியே பாயாமல் – தக்க
துணையுடனே குளிப்பாய் !

பொங்கு கடலினிலும் – விரைந்து
போகின்ற ஆற்றினிலும் – மூவாறு
சங்கமச் சூழலிலும் – இறங்கிச்
சாவை அழைக்காதீர்!

ஏரி குளங்களிலே – நீந்தி
ஏற்றம் நீர் பெற்றிருந்தால் – ஓடும்
நீரிலும் நீந்திடலாம் – போட்டியில்
நீந்தி வெற்றி பெறலாம் !

நீச்சலில் போட்டிவைத்தால் – பரிசுகள்
நீங்களும் வாங்கிடவே – இன்றே
நீச்சல் பழகிடுங்கள் – பரிசு
நிச்சயம் வாங்கிடலாம் !

– ம. முகமது மைதீன்

## செயல்பாடுகள்

- குழுவாகச் சேர்ந்து கவிதைக்கு மெட்டமைத்துப் பாடுங்கள்.
- கவிதையில் ஆசிரியர் நீச்சலைக் குறித்து என்ன கூறுகிறார்? எழுதுங்கள்.
- குழுவில் சேராததைக் கண்டுபிடித்து வட்டமிடுங்கள்.
    - ஆறு, குளம், கடல், வயல்
    - மீன், ஆமை, மான், தவளை
    - நாய், மேகம், பூனை, கிளி
    - ஓடுதல், சாடுதல், நீந்துதல், நடத்தல்.
- நீந்துவதால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன என்பதை எழுதுங்கள்.
- "நீச்சலும் அதன் பயன்களும்" என்ற தலைப்பில் சுகாதார மன்றம் சார்பாகப் பள்ளியில் விழிப்புணர்வு முகாம் நடைபெற உள்ளது. அதைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு ஒரு சுவரொட்டி தயார் செய்யுங்கள்.

### முட்டாள் வாத்துகள்

ஆற்றுக்குத் தண்ணீர் குடிக்க வந்தது நரி. அப்போது அந்த ஆற்றுக்குள், வாத்துக் கூட்டம் நீந்திக் கொண்டிருந்தது.

அந்த வாத்துகள் நரியை எள்ளி நகையாட விரும்பின. ஒரு வாத்து சொன்னது.

"நண்பர்களே! இன்று நாம் அந்த நரியைக் கேலி செய்து அழச் செய்துவிடுவோம்" என்றது.

மற்ற வாத்துகளும் ஒத்துக் கொண்டன. கிழவாத்து ஒன்றும் அங்கே இருந்தது. அது மற்ற வாத்துகளைப் பார்த்துப்





'பிள்ளைகளே! நீங்களெல்லாம் தப்பு செய்ய நினைக்கின்றீர். வேண்டாம் விபரீத எண்ணம்" என்றது. அதற்கு அந்த வாத்துகள்,

"கிழவாத்தே! வயது ஆனால் புத்தியுமா மழுங்கிப் போய்விடும். நாமெல்லாம் ஆற்றுக்கு நடுவில் இருக்கின்றோம். அந்த நரியோ ஆற்றங்கரையில் உள்ளது. மேலும், அந்த நரிக்கு நீச்சல் தெரியாது" என்றன. உடனே கிழவாத்து, "நரிக்கு நீச்சலடிக்கத் தெரியாது என்று உங்களுக்கு யார் சொன்னது?" என்றது. இன்னொரு வாத்து குறுக்கிட்டது.

"நரிக்கு நீச்சல் தெரிந்தால் நம்மைப்போல நடு ஆற்றுக்கு வந்து நீர் அருந்திவிட்டுச் செல்லலாமே!" என்றது. கிழவாத்துக் கோபமானது. "புரியாமல் பேசுகிறாய்! கரையிலேயே நீர் கிடைக்கும் போது, நரி ஏன் நடு ஆற்றுக்கு வர வேண்டும்?" என்று கேட்டது. இளவாத்துகள் ஒன்று கூடிக்கொண்டன.

'கிழவாத்தே ! உனக்குப் பயமாக இருந்தால் போய்விடு. நாங்கள் நரியைக் கேலி பண்ணி விளையாடத்தான் போகிறோம்' என்றன. கிழவாத்துச் சொன்னது, "நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். நரி நீச்சலடிப்பதை நானே பார்த்திருக்கிறேன்" என்றது.

ஆனால் அதையெல்லாம் மற்ற வாத்துகள் கண்டு கொள்ளவேயில்லை. நரியைக் கேலி செய்யவும் தொடங்கின. நரியே! நீ குட்டைவால் நரி தானே. உன் வாலினைப் போலவே உன் புத்தியும் குட்டை தானே என்றது. அடுத்த வாத்து, நரியே! நீ முட்டாள் தானே. அதனால் தான் இந்த ஆற்றில் நீர் அருந்த வந்துள்ளாய் என்றது. இப்படி வாத்துகள் புதிது புதிதாகப் பேசிக்

கேலி பண்ணின. நரி கோபமானது. யார் முட்டாள்? என்று காட்டுகிறேன் என்றபடியே ஆற்றுக்குள் குதித்து, விரைந்து நீந்தத் தொடங்கியது.

அதன் வேகத்தைப் பார்த்த வாத்துகள் மிரண்டு போயின. நிச்சயமாக நம்மால் தப்பிக்க முடியாது என்று புரிந்து கொண்டன. நரி நெருங்கி விட்டது. கிழவாத்து வேண்டிக் கேட்டுக் கொண்டது.

நரியே, உனது அருமை பெருமைகள் தெரியாமல் முட்டாள் வாத்துகள் பேசிவிட்டன. தந்திரத்திற்கும் புத்திசாலித்தனத்திற்கும் அடையாளமாக உன்னைத்தான் இந்த உலகமே கொண்டாடுகிறது. தெரியாமல் பேசி விட்டன. இனி அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன். இந்த ஒருமுறை அவர்களை எல்லாம் மன்னித்துவிடு என்றது.

நரி சமாதானமாகி அங்கிருந்து மீண்டும் கரைக்குச் சென்றது. கிழ வாத்துக்கு எல்லா வாத்துகளும் நன்றி சொல்லிக் கொண்டன.

– விலங்குக் கதைகள் தொகுப்பு

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- வாத்துகள் நரியைக் கேலி செய்தது சரியா? உங்களுடைய கருத்துகளைக் கூறுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - எள்ளி – ..........................
  - விபரீதம் – ..........................
  - மழுங்கி – ..........................
  - அருந்த – ..........................
- பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்

  நரியே உனது அறுமை பெறுமைகள் தெறியாமல் பேசிவிட்டன. தந்திரத்திற்கும் புத்திசாளித்தனத்திற்கும் அடையாளமாக உன்ணைத்தான் இந்த உளகமே கொண்டாடுகிரது. இந்த முட்டாழ் வாத்துகள் தெரியாமல் பேசிவிட்டன.
- பாடப்பகுதியை வாசித்து வினாக்கள் தயாரித்து வினாப்போர் நடத்துங்கள்.
- நரிக்கு நீந்தத் தெரியாமல் இருந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்? எழுதுங்கள்.



## உயிர்காக்கும் சட்டை

மூணாறு தொடக்கப் பள்ளி, நான்காம் வகுப்புக்கு வந்த வகுப்பாசிரியர் தங்கமணி ஒரு கேள்வியை எழுப்பினார்.

"உலகமறை தந்த ஒப்பற்ற ஒருவர்
உருவச் சிலையாய் நிற்கின்ற ஊர்!
மணமாகாத மங்கையர் இருவர்
இணைந்த பெயர் கொண்ட ஊர்!
இந்து அரபி வங்கம் என மூவர்
கலந்துறவாடும் ஊர்
அந்த ஊர் எந்த ஊர் ?"

பின் வரிசையில் அமர்ந்திருந்த அத்விக் சட்டென்று எழுந்தான்.

"கன்னியாகுமரி அய்யா" என்றான்.

மிகச் சரி மிகவும் நன்று எனப் பாராட்டினார் ஆசிரியர். தொடர்ந்து பேசிய அவர் சொன்னார் வருகின்ற வெள்ளிக்கிழமை அதிகாலை கன்னியாகுமரிக்குச் சுற்றுலா செல்கிறோம். ஆளுக்கு முந்நூறு ரூபாய் செலவாகும். யார் யார்? வர விரும்புகிறீர்கள். உடனே,

அத்தனை மாணவர்களும் எழுந்து நின்றார்கள் உற்சாகமாக.

வெள்ளிக்கிழமை அதிகாலை நேரம் சுற்றுலா பேருந்து வந்து நின்றது. முப்பது மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் ஏறிக் கொண்டார்கள். ஒவ்வொருவர் முதுகிலும் தோல்பைத் தொங்கியது.

பேருந்து உறுமிப் புறப்பட்டது.

அன்று மாலையே கன்னியாகுமரி வந்து சேர்ந்து விட்டது. மாணவரிடையே உற்சாகம் கரை புரண்டு ஓடியது. தங்கும் விடுதிக்குள் நுழைந்தார்கள். சுடச்சுட தேநீர் அருந்தினார்கள். பைகளை அறைக்குள்ளே போட்டுவிட்டு ஆசிரியர்களுடன் புறப்பட்டார்கள். கடற்கரை வந்தார்கள். கதிரவன் மறையும் காட்சியைக் கண்டார்கள்.

ஆஹா! என்னே அழகு; என்னே அழகு!
மகிழ்ச்சியில் குதித்தார்கள்.



அன்றிரவு விடுதியில் களைப்புத் தீர உறங்கினார்கள்.

மறுநாள் காலை எழுந்தார்கள். கடற்கரை நோக்கி நடந்தார்கள்.

ஆகா! கதிரவன் உதிக்கும் காட்சி!
கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது
ஆஹா! அற்புதம்! அற்புதம்!
மாணவர்களின் உள்ளங்கள் துள்ளின.
என்னே அழகு! என்னே அழகு!

மீண்டும் விடுதிக்குத் திரும்பி வந்தார்கள். குளித்தார்கள்; புத்தாடை அணிந்தார்கள்; சிற்றுண்டி அருந்தினார்கள்.

மீண்டும் கடற்கரைக்கு வந்தார்கள். கடலின் அழகைப் பார்த்து விட்டுக் காந்தி, காமராஜர் நினைவு மண்டபங்களைப் பார்வையிட்டார்கள். மகிழ்ந்தார்கள். பின்னர் மெல்ல மெல்ல நடந்து படகுத்துறைக்கு வந்தார்கள்.

ஆசிரியர்கள் சென்று படகு பயண சீட்டுகளை வாங்கினார்கள். அங்கிருந்த ஊழியர்கள் ஆளுக்கு ஒரு மிதப்புச்சட்டை வழங்கினார்கள்.

எதற்கையா! இந்தச் சட்டை. தெறிக்கும் கடல் நீர் உடம்பில் படாமல் இருக்கவா! மாணவன் மணிமாறன் கேட்டான். ஆசிரியர் தங்கமணி விளக்கினார்.

இது சாதாரண சட்டை அல்ல. உயிர் காக்கும் சட்டை. உயிர் காக்கும் மேலங்கி என்றும் கூறினார்.

ஒருவேளை படகு கவிழ்ந்தாலோ பாறையில் முட்டி உடைந்தாலோ, நாம் கடலில் விழுந்தாலோ, உயிர் காக்கும் சட்டை இருந்தால் கடலில் மூழ்கமாட்டோம். மிதப்போம். அதுதான் இந்தச் சட்டையின் சிறப்பு. மிதப்புச்சட்டைகளை அணிந்து கொண்டே மாணவர்களும் ஆசிரியர்களும் படகில் ஏறினார்கள். படகு விவேகானந்தர் பாறையை நோக்கி விரைந்தது. மாணவர்களின் உற்சாகக் குரல்கள் ஒலித்துக் கொண்டே இருந்தன.

– தக்கலை மன்னன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- பாடப்பகுதியில் ஆசிரியர் எந்தெந்த இடங்களுக்குச் சென்றதாகக் குறிப்பிடுகின்றார். எழுதுங்கள்.
- படகில் செல்லும்போது பாதுகாப்புக் கவசம் ஏன் அணிகிறார்கள்? எழுதுங்கள்.
- நீங்கள் சென்றப் பயணம் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.



அலகு 4

# ஒளி விளக்கு



**இன்றைய சமூகத்தில் கல்வியிலும் கூட்டுறவாகச் சேர்ந்து வேலைகள் செய்வதிலும் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். அதுபோலவே விடுதலைப் போராட்டக் காலங்களிலும் அவர்களின் பங்களிப்பு அளவிடற்கரியது. ஆகவே பெண்களின் பங்களிப்பைப் போற்றுவோம்!**

# கல்வியரசி



## எங்கள் ஆசிரியை

அன்பைச் சொல்லும் பண்பரசி
அழகுறக் கற்பிக்கும் கலையரசி...!.
அம்மாபோல அவர் இருப்பார்
அப்பாபோல அறிவு சொல்வார்...!

மதிக்கு எட்டும் செய்திகளை
இனிக்க இனிக்கச் சொல்லிடுவார்
தெளிந்த ஓடைநீர்போல
தெளிவாய் இருக்கும் அவர் பேச்சு...!

கதைகள் யாவும் அவர் சொல்ல
கருத்தாய் நாங்கள் படித்ததனால்
ஒன்றும் அறியா இருந்த எம்மை
உலகே வியக்க அவர் செய்தார்...!

எங்கள் ஊரின் மந்திரியும்
எங்கள் ஊரின் மருத்துவரும்
எங்கள் ஊரின் காவலரும்
அவரிடம் படித்த மாணவராம்...!

தாத்தா பாட்டி சொன்னாங்க
தலை நிமிர்ந்தே சொன்னாங்க
நாடும் அவரைப் போற்றிடுதே
நாமும் அவரைப் போற்றிடுவோம்...!

– பொன். சொர்ணவேல்

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்
- கவிதையில் ஆசிரியரைப்பற்றி எவ்வாறெல்லாம் கூறப்பட்டுள்ளது. சொல்லுங்கள்.
- இரு சொற்கள் ஆக்குங்கள்.
  - கலையரசி = ............................ + ............................
  - பண்பரசி = ............................ + ............................
  - எழிலரசி = ............................ + ............................
  - நாவரசி = ............................ + ............................
  - தமிழரசி = ............................ + ............................
- கவிதையை முழுமையாக்கித் தலைப்பு கொடுங்கள்.

தாத்தா பாட்டி கூட இருந்து
பாட்டுப் பாடலாம்
தைரியமாய்ச் சதுரங்கத்தில்
சண்டை போடலாம்
..................................................
..................................................
..................................................
..................................................

## செய்நன்றி அறிதல்!

காவிரி நதியின் வடகரையிலிருந்த ஒரு கிராமத்தில் சிறந்த அறிவுடைய ஒரு பெண்மணி இருந்தார். அவர் பெயர் சிலம்பி. நல்ல கவி எழுதும் ஆற்றல் பெற்றவர். அவர் தனது வாழ்நாள் ஆசையாக, புகழ் பெற்ற கவிஞரிடம் ஒரு கவிதை பெற வேண்டும் என ஆசைப்பட்டார். கவிஞரிடம் கவிதை பெற வேண்டுமென்றால், இரண்டாயிரம் பொன் தர வேண்டும் என்பதை அறிந்து, தனது சொத்துகளையெல்லாம் விற்றார். ஓராயிரம் பொன் மட்டுமே சேர்ந்தது. அதைக் கொண்டு போனார். அதை அவரிடம் கொடுத்தார். அதற்குக் கவிஞர், பாதிக் கவிதையை ஓர் ஓலைச் சுவடியில் எழுதிச் சிலம்பியிடம் கொடுத்து, மீதம் வந்தால் பாதியும் வரும் என்றார்.

வருத்தத்தோடு அதை வாங்கி வந்து வீட்டிலே சுவரில் அந்த வரிகளைத் தீட்டினார். இரவுப் பகலாக இராட்டினத்தில் நூல் நூற்று மீதமுள்ள ஆயிரம் பொன் சேர்க்கத் துணிந்தாள். ஒரு



நாள் அவர் வீட்டிற்கு ஔவைப் பாட்டி வந்தார். ஔவையார் அவர் வீட்டிற்கு வந்தபோதும் அவர் நூல் நூற்றுக் கொண்டே இருந்தார். பசி அதிகமாக எடுத்ததால் கொஞ்சம் கூழ் தரும் படி ஔவை கேட்க, அவளும் அன்போடு உணவு கொடுத்தாள். அதை உண்டு விட்டு நிமிர்ந்து பார்த்த போது சுவரில் பாதியாய் எழுதப்பட்ட கவிதையைக் கண்டார். ஒரு சுண்ணாம்புத் துண்டை எடுத்து அந்தச் சுவரிலே எழுதியிருந்த பாடலின் வரிகளுக்கு மீதமுள்ள வரிகளை எழுதி முடித்தார் ஔவையார். சிலம்பியும் அகமகிழ்ந்தார். பழங்கூழ் ஒருவயிறு கொடுத்து உதவியவருக்கு ஓராயிரம் பொன் பெறுமாறு கவிதை வரிகளை அளித்தவர் நம் ஔவைப்பாட்டி.

'நன்றி மறப்பது நன்றன்று' என்னும் குறளுக்கேற்ப வாழ்ந்தவர் அவர்.

– இரா. திருநாவுக்கரசு

## செயல்பாடுகள்

- கதையில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரத்தைக் கூறுங்கள். எழுதுங்கள்.

- அகராதிப் பார்த்து பொருள் எழுதுங்கள்.
  - ஆற்றல் – ..........................  
  - கவி – ..........................
  - தீட்டினார் – ..........................
  - வருத்தம் – ..........................

- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - ஆற்றல் – ..........................................................................................
  - அன்போடு – ..........................................................................................
  - ஓராயிரம் – ..........................................................................................

- எதிர்ச்சொற்களை எழுதுங்கள்.
  - துணிவு × ..........................
  - கொஞ்சம் × ..........................
  - சிறியது × ..........................
  - விருப்பம் × ..........................

- பாடப்பகுதியிலிருந்து வினாக்கள் உருவாக்கி, வினாப்போர் நடத்துங்கள்.



## அறிவின் மகுடம்

அந்தச் சிறுமியின் பெயர் மரியா. வயது நான்கு. ஆனால், அவள் கேட்கும் கேள்விகள் ஒவ்வொன்றும் பதில் சொல்லத் தெரியாமல் பெற்றோரைத் திணற அடித்துவிடும்.

சில சமயம் தந்தை ஏதோ சமாளித்துப் பதில் சொல்வார். சிறுமிக்கு அந்தப் பதில் திருப்தி தராது. அதிலிருந்து இன்னொரு கேள்வி கேட்பாள்.

மரியாவின் வயதொத்த மற்ற சிறுமிகளெல்லாம் பெண்கள் பள்ளிக்குப் படிக்கப் போனார்கள். மரியாவோ ஆண்கள் பள்ளிக்கு அனுப்பப்பட்டாள். காரணம், அக்காலத்தில் இத்தாலி நாட்டில் பெண்கள் பள்ளியென்றால் பூ வேலையும் துணி தைத்தலும் இசையும் நாட்டியமும் தான் பாடத்திட்டமாக இருந்தன. ஆனால், புத்திசாலிப் பெண்ணான மரியா தன் பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் ஆண்கள் பள்ளியில் படிக்கும் உயிரியல் பாடம், மருத்துவப் பாடம் போன்றவற்றைக் கண்டு, அதுபோல் தானும் படிக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள்.

படித்தாள் மரியா! மருத்துவம் படித்தாள்!

இத்தாலியின் ரோம் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் படிப்பில் முதலாவதாகத் தேறினாள். அவளது அறிவுத் திறன் கண்ட பல்கலைக் கழகம், அவளுக்குக் கல்லூரியில் பேராசிரியர் பதவியளித்துக் கவுரவித்தது.

மன நோயாளிகள் பலரின் நோய்க்கான காரணம் அவர்கள் பிள்ளைப் பருவ வாழ்வில் நேர்ந்த பிரச்சனைகள்தான் எனத் தெரியவந்தது. அதனால் குழந்தைகளின் குணங்களை ஆராயலானாள்.

மனக் குறைபாடு உள்ள குழந்தைகளால் எதையும் சரிவர கற்றுக்கொள்ள முடிவதில்லை என்று அவளுக்கு விளங்கியது.

அதை மாற்றும் விதம் தனியே ஒரு பள்ளி நிறுவி, ஆராய்ச்சியைத் தொடர்ந்தாள்.

ஆய்வின் முடிவில், 'மனக் குறைபாடு உள்ள குழந்தைகளுக்குச் சரியான மாற்றுச் சூழ்நிலை, பாதுகாப்பு, மனதில் குதூகலம், விளையாட்டு உபகரணங்கள் தேவை என்பதை உணர்ந்தார். இந்த உண்மையின் அடிப்படையில் புதிய வழியில் கல்வி புகட்ட ஒரு பள்ளியைத் தொடங்கினார்.

குழந்தைகள் ஓடியாடி, விளையாடி மனம் போல் படிக்க வாய்ப்பு தந்தது இந்தப் புதிய கல்வி முறை. இந்தக் கல்வி முறை 'மாண்டிசோரி கல்வி முறை என்றே இப்போதும் அழைக்கப்படுகிறது.

இந்தக் கல்வி முறையை ஏற்படுத்திய பெண்மணி (1870–1952) பெயர்தான் மரியா மாண்டிசோரி.

– ஆர்.சி. சம்பத்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
    - ஈடுபாடு – ............................
    - சூழ்நிலை – ............................
    - உபகரணம் – ............................
    - புகட்டுதல் – ............................
- வாக்கியங்களை ஒழுங்குபடுத்துங்கள்.
    - உதவி செய்தார்/ அன்னை தெரசா/ ஏழைகளுக்கு
    - பெண்கள்/பங்கெடுத்தனர்/போட்டியில்
    - சென்றார்/ விண்வெளி / கல்பனா சாவ்லா
- பெண்கள் பள்ளியில் என்னென்ன பாடங்கள் கற்பிக்கப்பட்டன. எழுதுங்கள்.
- மாண்டிசோரி கல்விமுறையைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.



# கூட்டுறவு



## ஒன்று சேர்வோம்

அறிவும் தொழிலும் கலைநலமும்
ஆட்சித் திறனும் ஒன்றாகப்
பெருகிப் பல்கி வளர்கிறது;
பெருமை உயர்வு காண்கிறது;

செறிவும் செழிப்பும் சீர்வளமும்
சேர்ந்து மலர்ந்து வையத்தை
மருவிக் கொழிக்க வேண்டுமெனில்
மலரும் பாதை கூட்டுறவே!

மனிதன் மனிதனை மதிக்கும் நெறி
மயக்க மில்லா பொதுமை நெறி
கனியும் தேனும் நறும்பாலும்
கலந்திங் கினிமைச் சுவைகூட்டி

புனித மிக்க புகழ் மிக்க
புரட்சி மிக்க வரலாற்றைக்
கனியும் வண்ணம் செய்த நெறி
கடமை வளர்க்கும் கூட்டுறவே !

பணந்தான் பெருமை யுடையதுவோ
பண்போ என்று கேட்டக்கால்
பணமோ இல்லை "பண்பு" என்று
பகரும் முறையும் கூட்டுறவே!

– பரமசிவன்

## செயல்பாடுகள்

- கவிதையை நன்றாக வாசித்து இராகத்துடன் பாடுங்கள்.
- முதலாம் எழுத்தும், இரண்டாம் எழுத்தும் ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- கவிதையில் கூட்டுறவைப் பற்றி ஆசிரியர் என்னென்ன கூறுகிறார். சொல்லுங்கள்.
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - குழுவாக
  - பாராட்டினார்
  - மகிழ்ச்சியாக
  - கூட்டுறவு
- கவிதையை வாசித்துக் கருத்தைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் வட்டாரத்தில் கூட்டுறவாகச் செய்யும் ஒரு செயலைப் பற்றித் தகவல்கள் சேகரித்துக் குறிப்பு எழுதுங்கள்.

### கண்ணம்மா

கண்ணம்மா பிறவியிலேயே கண் இல்லாதவள். அவள் பெற்றோர்தான் அவளுக்கு இரு கண்கள். அவள் பெற்றோர் அவளுக்குச் சின்னஞ்சிறு வயதிலேயே தன்னம்பிக்கையை ஊட்டினர். அவளுக்கு எந்தவிதமான மனவருத்தமும் ஏற்படாதபடி அவளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து அன்பு காட்டி வந்தனர். இதனால், கண்ணம்மா கண்ணில்லாத குறை தெரியாமல் வளர்ந்து வந்தாள். கண் தெரியாதவர்கள் பள்ளிக்கூடத்தில் அவளைச் சேர்த்தனர். படிப்பில் படு சுட்டியாக அவள் விளங்கினாள். விளையாட்டு மற்றும் பேச்சுப் போட்டி போன்ற கலைகளை ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்தனர். வீட்டில் இருக்கும்போது மற்ற குழந்தைகள் செஸ் விளையாடுவதைப் போன்று, கண்ணம்மாவும் விளையாட விரும்பியதை அவளது தந்தையார் உணர்ந்தார். மகளின் மனநிலையைப் புரிந்துகொண்டு அவளுக்குச் செஸ்வாங்கிக் கொடுத்தார். அவளுக்கு விளையாடும் முறையையும் கற்றுக்கொடுத்தார். அதனைக் கண்ணம்மா மிக எளிதாகக் கற்றுக் கொண்டாள். அவளது விளையாட்டுத் திறமை கண்டு தந்தை வியந்தார்.

தந்தையாரைக் குருவாகக் கொண்டு செஸ் விளையாட கற்றுக்கொண்டவள், தந்தையாரை வெல்லுமளவுக்குத் திறமையாக விளையாடினாள். அவளது திறமையைக் கண்டு வியந்த அவளது தந்தையார், அவளைப் பல செஸ் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்தார். அங்கெல்லாம், தனக்கு நிகராக விளையாட எவரும் இல்லை என்பதுபோல தனது



தனித் திறமையை நிரூபித்தாள். அவளது விளையாட்டுத் திறமையையும் செஸ் ஆட்டப் பொலிவினையும் கண்டு அனைவரும் வியந்தனர். "செஸ் ராணி" என்ற பட்டத்தினையும் பெற்றாள். அதனால் பிரபல செஸ் வீரர்கள் கூட அவளோடு மோதுவதற்கு அஞ்சினர். செஸ் விளையாட ஆரம்பித்த சில நிமிட நேரத்திலேயே போட்டியில் கலந்து கொள்வோரைத் திக்கு முக்காடச் செய்துவிடுவாள். கண்ணில்லாத கண்ணம்மாவை உலகத்தின் கண்கள் அனைத்தும் பார்த்துப் பரவசம் அடைந்தன.

– இறைநம்பி

## செயல்பாடுகள்

- கதையை நன்றாக வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- கதையில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? காரணம் என்ன? கூறுங்கள்.
- பாடப்பகுதி வாசித்துக் கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புங்கள்.
  - கண்ணம்மா கண்ணில்லாத .................................. தெரியாமல் வளர்ந்து வந்தாள்.
  - .............................. மற்றும்................................போன்ற கலைகளை ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்தனர்.
  - கண்ணம்மா...................................என்ற பட்டத்தினைப் பெற்றாள்.
  - கண்ணம்மாவின்........................ கண்டு அவரது தந்தை வியந்தார்.
- கண்ணம்மாவைச் சந்தித்தால் என்னென்ன வினாக்கள் கேட்பீர்கள். வினா நிரல் தயார் செய்யுங்கள்.

## அழைப்பிதழ்

### பாராட்டு விழா
**அழைப்பிதழ்**

அன்புடையீர்,

நமது பள்ளியையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் சிறந்த முறையில் சுத்தம் செய்து சுற்றுச் சூழலுக்கு ஏற்ற விதம் சிறப்பாக்கிய பசுமை பாதுகாப்புப் படை உறுப்பினர்களைப் பாராட்டும் விதம் ஒரு பாராட்டு விழா நமது பள்ளியில் வைத்து நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்நிகழ்ச்சியில் எல்லா பெற்றோர்களும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

நாள் : 24/10/2025

நேரம் : காலை 10 மணி

இடம் : பள்ளி மைதானம்,
அரசு ஆரம்பப்பள்ளி திருவனந்தபுரம்.

## செயல்பாடுகள்

- அழைப்பிதழ் வாசித்துக் கலந்துரையாடுங்கள்.
- இப்பாராட்டு விழாவைப் பத்திரிகையில் வெளியிட பத்திரிகைச் செய்தியாக மாற்றுங்கள்.
- பெண்கள் குழுக்களாகச் செயல்படும் வேறு என்னென்ன அமைப்புகள் கேரளத்தில் உள்ளன. தகவல் திரட்டி எழுதுங்கள்.
- நிகழ்ச்சி நிரலை முழுமையாக்குங்கள்.

தேதி : ....................................
இடம் : ....................................
நேரம் : ....................................
இறைவணக்கம் : ....................................
வரவேற்புரை : ....................................
தலைமை : ....................................
துவக்கவுரை : ....................................
வாழ்த்துரை : ....................................
பாராட்டு பெறுபவர் : ....................................
நன்றியுரை : ....................................
நாட்டுப்பண் : ....................................



# நட்சத்திரங்கள்



## ஜான்சிராணி லெட்சுமிபாய்

உத்திர பிரதேச வாரணாசி
உலகிற் களித்த நல்ல
உத்தமி மணிகர் னிகா
உலகிற் கோர்ஒளி விளக்கே.

மன்னர் கங்கா தரராவ்
மண்ணக வாழ்வு நீங்க
தன்கணவர் வாரி சென்றே
தத்தொன்று எடுத்துக் கொண்டார்.

இந்தியர் மரபு மண்ணில்
இதுவாக இருந்த போதும்
அந்நியன், ஆட்சி தனக்கே
ஆளும் உரிமை என்றான்.

முதலிந்திய சுதந்திரப் போர், தீ
மூண்டே போது தானும்
சுதந்திர தேவி யாகச்
சுடர்க்கொடி போரில் நின்றார்.

ஆத்திரம் வரும்போ தங்கே
ஆணென்ன பெண்ணென்ன பழைய
சாத்திரம் தூளாய்ப் போகும்
சரித்திரச் சுடரே தோன்றும்.

கோட்டை குவாலியர் போரில்
குதித்திட ராணி ஜான்சி
நாட்டைக் காக்க தன்னுயிர்
நல்கினார் வீர மங்கை!

– இதய கீதம்

## செயல்பாடுகள்

- கவிதையை வாசித்து இராகத்துடன் பாடுங்கள்.
- கவிதையில் ஜான்சிராணியை எப்படி வர்ணிக்கிறார்கள். கூறுங்கள்.
- ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
    - மங்கை – ................................
    - மரபு – ................................
    - உத்தமி – ................................
    - நல்கினார் – ................................
- எதிர்ச்சொல் எழுதுங்கள்.
    - நல்ல × ............................
    - வாழ்வு × ............................
    - பழைய × ............................
    - வீரன் × ............................
    - ஒளி × ............................
- கவிதையை வாசித்துக் கதையாக எழுதுங்கள்.
- நா பிறழ் பயிற்சி (வேகமாக வாசியுங்கள்)

அவள் அவலளந்தால் இவள்
அவலளப்பாள் இவள் அவலளந்தால்
அவள் அவலளப்பாள் அவளும்
இவளும் அவலளக்கா
விட்டால் எவள்
அவலளப்பாள்



## 'சங்கீத ராணி' கே.பி. சுந்தராம்பாள்

கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் கொடுமுடியில் 1908–ஆம் ஆண்டு பிறந்தார். ஏழ்மையான குடும்பம். சிறு வயதிலேயே அருமையாகப் பாடுவார். அவர் வளர வளர பாடும் திறன் மெருகேறிக் கொண்டே சென்றது.

கால ஓட்டத்தில் அவர் கும்பகோணம் நாடக மேடைகளில் பாட ஆரம்பித்தார். அவரின் குரலுக்காகக் கூட்டம் கூடியது.

அவரின் காலம் திரைப்படத்திற்கு முந்திய நாடக காலம். அவர் பாடும் மேடைகள் மக்களால் விரும்பிக் கேட்கப்பட்டன.

இந்திய விடுதலைக்காகப் பல மேடைக் கலைஞர்கள் தங்களின் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறார்கள். நாட்டுச் சுதந்திரத்திற்காக உழைத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவரான கே.பி. சுந்தராம்பாள் தனது வெண்கலக் குரலால் தமிழ் மக்களின் இதயங்களைக் கவர்ந்துள்ளார்.

அவரின் பாடல்கள் ஒவ்வொன்றும் மக்கள் மனதை விட்டு நீங்காதவை.

நூற்றுக்கணக்கான இனிய தமிழ்ப் பாடல்களை வழங்கிய கே.பி. சுந்தராம்பாளின் தேசபக்தி பாடல்கள் சுதந்திர போராட்ட காலத்தில் தூங்கிக் கிடந்த இளைஞர்களை, வெள்ளைய அரசை எதிர்த்துப் போராடவும் துடிதுடித்து எழுச்சிப் பெறவும் வைத்தன.

அவர்கள் பாடி நடிக்கும் இதிகாச நாடகங்களால் ஈர்க்கப்பட்ட மக்கள் அவரின் தேசபக்தி பாடல்களைக் கேட்டு, வெள்ளைய அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தனர்.

1932–ஆம் ஆண்டு 'காந்திஜி' பற்றி அவர் பாடிய பாடல்கள் இசைத்தட்டு வடிவிலும் புத்தக வடிவிலும் பாடிக்கேட்டும் படித்த மக்கள் தேசபக்தர்கள் ஆயினர்.

அவரது பாடல்கள் இன்று மட்டுமல்ல. தமிழ் உலகம் உள்ளவரை வாழும் என்பதில் ஐயமில்லை.

– சிவரஞ்சன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- பாடப்பகுதியில் கே .பி. சுந்தராம்பாள் பற்றி ஆசிரியர் கூறும் செய்திகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- புதிய சொற்களை உருவாக்குங்கள்.

  எ.கா : கடுஞ்சண்டை – கண், கடை, சடை, சண்டை

  விடுதலை நாள் – ..........................................................................

  கரும்பலகை – ..........................................................................

  பழக்க வழக்கம் – ..........................................................................
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - நீங்காதவை
  - ஏழ்மையான
  - கிளர்ந்து
  - கவர்ந்த
- சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட பெண்களின் படங்களைச் சேகரித்துத் தொகுப்பு உருவாக்குங்கள். அடிக்குறிப்பு எழுத மறவாதீர்கள்.

## பழமும் தோலும்

### காட்சி – 1

நடிப்போர் : அக்பர், அரசி, பீர்பால், காவலர் இருவர்

(இடம் : அக்பரும் அரசியும் மேசையில் அமர்ந்து பழம் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்)

அக்பர் : என்ன ராணி, இன்று இவ்வளவு பூரிப்பாக இருக்கிறாய்?

அரசி : எல்லாம் மன்னர் முகம் பார்த்துதான்.

அக்பர் : என்ன என் முகம் பார்த்தா?

அரசி : ஆமாம்.

அக்பர் : எப்படி?

அரசி : எப்பொழுதும் தீவிர சிந்தனையுடன் இருக்கும் தாங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறீர்களே! அதைப் பார்த்துதான்.

அக்பர் : ஓ...அதுவா.... என் மகிழ்ச்சிக்குப் பீர்பால் தான் காரணம்.

அரசி : என்னது பீர்பாலா?

அக்பர் : ஆம் ராணி. எந்தப் பிரச்சனைகளுக்கும் எளிதில் விடை கூறும் அதிபுத்திசாலி.

அரசி : பீர்பாலின் புகழ் நாடெங்கும் பரவி விட்டதே!

அக்பர் : ஆமாம்... பீர்பாலினால் நம் நாட்டுக்கும் பெருமைதானே! (காவலன் வருகிறான்)

காவலன் : மாமன்னருக்கு வணக்கம்! தங்களைக் காண பீர்பால் அவர்கள் வந்திருக்கிறார்கள்.

அக்பர் : அவரை உள்ளே வரச்சொல் (காவலன் செல்கிறான்)

அக்பர் : ராணி... இன்றும் பீர்பாலுடன் விளையாடுகிறேன்... பார்...

அரசி : என்ன செய்யப் போகிறீர்கள். (வாழைப்பழத்தோல்களை எல்லாம் எடுத்து ராணி சாப்பிட்டுப் போட்ட வாழைப்பழத் தோல்களுடன் போடுகிறார்)

அரசி : என்ன இது, தாங்கள் சாப்பிட்டுப் போட்டப் பழத்தோல்களை எல்லாம் என் அருகில் போடுகிறீர்கள்.

அக்பர் : எல்லாம் காரணமாய்த்தான் ராணி! பொறு... பீர்பால் வரட்டும்... (பீர்பால் வருகிறார்)



## காட்சி – 2

நடிப்போர் : அக்பர், அரசி, பீர்பால்

பீர்பால் : மன்னருக்கு வணக்கம்! அரசியாருக்கும் வணக்கம்!

அக்பர் : வாருங்கள் பீர்பால், திடீரென வந்து நிற்கிறீர்கள் என்ன விசயம்?

பீர்பால் : என் உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வெளியூர் செல்வதால் தங்களிடம் கூறிவிட்டுச் செல்லலாமென வந்தேன்.

அக்பர் : நல்லது சென்று வாருங்கள். சீக்கிரம் வாருங்கள்.

பீர்பால் : நன்றி மன்னா! அரசியாரே நலம் தானே!

அரசி : மிக்க நலம். தாங்கள் நலமா!

பீர்பால் : தங்களின் ஆசியில் அனைவரும் நலமே.

அக்பர் : பீர்பால் இதைக் கவனித்தீர்களா..

பீர்பால் : என்னவென்று கூறுங்கள் மன்னா!

அக்பர் : உங்கள் அரசியாரைப் பாருங்கள். அவர் சாப்பிட்டுப் போட்ட வாழைப்பழத்தோல்களை.

பீர்பால் : என்ன? (ஆச்சரியத்துடன்)

அக்பர் : அரசியாரே! இவ்வளவு வாழைப்பழமும் சாப்பிட்டால் என்னாவது.

பீர்பால் : ஆமாம்... மன்னா... அரசியாவது பழத்தைச் சாப்பிட்டுத் தோலைப் போட்டு விட்டார்கள். தாங்களோ, தோலையும் சேர்த்து அல்லவா! சாப்பிட்டு இருக்கிறீர்கள்.



அக்பர் : பீர்பால் நீ பொல்லாத ஆளய்யா... பார்த்தாயா அரசி... பீர்பாலின் சாமர்த்தியத்தை....

அரசி : ஆமாமாம்..

பீர்பால் : நல்லது எனக்கு விடை கொடுங்கள்.

அக்பர் : சென்று வாருங்கள்.

– முத்தழகர்

## செயல்பாடுகள்

- நாடகத்தில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் யார்? காரணம் கூறுங்கள்?
- குழுவில் சேராதது எது? வட்டமிடுங்கள்.
  - ராஜா, இளவரசர், ராணி, பிரஜை
  - மயில், புலி, கிளி, புறா
  - வெண்மை, கருமை, செம்மை, வளமை
  - கத்தரி, வெண்டை, தென்னை, தக்காளி.
- தொடரில் 'உம்' சேர்த்து எழுதுங்கள்.

  எ.கா : பாட்டைக் கேட்டான். ஆட்டம் போட்டான்.

  பாட்டைக் கேட்டதும் ஆட்டம் போட்டான்.

  - மேகம் கறுத்தது. மழை பெய்தது.

    ....................................................................................................

  - பழம் விழுந்தது. குரங்கு குதித்தது.

    ....................................................................................................

  - பானை உடைந்தது. தயிர் சிந்தியது.

    ....................................................................................................

  - பூனை வந்தது. எலி ஓடியது.

    ....................................................................................................

  - புலியைப் பார்த்தது. மான் விரைந்தோடியது.

    ..........................................................................................

- நாடகத்தைக் கதை வடிவில் எழுதுங்கள்.
- நாடகத்தைக் குழுவாகச் சேர்ந்து நடியுங்கள்.
- இதுபோன்ற நாடகங்களை நூலகத்திலிருந்து சேகரித்து நாடகத் தொகுப்பு உருவாக்குங்கள்.



# அகரமுதலி

அச்சம் – பயம்
அஞ்சி – நடுங்கி / பயந்து
அணிந்து – தரித்து
அதிகரித்தல் – மிகுதியாதல்
அபாயம் – ஆபத்து
அரிய – அபூர்வம்
அருந்த – குடிக்க
அலுப்பு – சலிப்பு
அனுசரித்தல் – கடைப்பிடித்தல்
ஆச்சரியம் – வியப்பு
ஆசான் – குரு
ஆய்வு – ஆராய்ச்சி
ஆயத்தம் – தயார்
ஆற்றல் – திறமை / சக்தி
இயம்புவாய் – சொல்லுவாய்
இயன்ற – முயன்ற
இராட்டினம் – நூல் நூற்கும் கருவி
இரை – உணவு
இளையோர் – வயதில் குறைந்தோர்
ஈடுபாடு – ஆர்வம்
உடமை – சொத்து
உத்தமி – சிறந்தவள்
உபகரணம் – கருவி
உல்லாசம் – மகிழ்ச்சி
உற்சாகம் – ஆர்வம் / மகிழ்ச்சி
ஊழியர் – பணியாளர்
எள்ளி – கேலி / பரிகாசம்
ஏற்றம் – உயர்ச்சி
ஐயம் – சந்தேகம்
ஒளிந்து – மறைந்து
ஓய்வு – இளைப்பாறுதல்
கரம்பு – தரிசு நிலம்
கவி – கவிதை
களித்திடல் – மகிழ்ந்திடல்
களைப்பு – சோர்வு
குவலயம் – உலகம்
கேலி – கிண்டல்
சிரமம் – கஷ்டம்
சீர்படுத்தல் – சரி செய்தல்
சூழ்நிலை – சூழல் / நிலைமை
தண்டச்சோறு – பயனற்றவனுக்குக் கொடுக்கும் உணவு
தன்னலம் – சுயநலம்
திறமை – ஆற்றல்/ சக்தி
தீட்டினார் – எழுதினார்
தொண்டு – சேவை
தொலைவு – தூரம்
நல்கினார் – வழங்கினார்
நானிலம் – நான்கு நிலம் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்)
நெடிய – நீளமான
நொந்த – நோவு
பகலவன் – சூரியன்
பண்பு – குணம்
பதுங்கி – மறைந்து
பரவசம் – மிகுந்த மகிழ்ச்சி
பருவம் – வயது /காலம்
பிரவேசித்தல் – நுழைதல்
புகட்டுதல் – கற்பித்தல்
புஞ்சை – புன்செய் நிலம்
புண்ணியம் – நன்மை
புதல்வர் – மகன் / மகள்
புதையல் – நிதி
பூரிப்பு – மகிழ்ச்சி / களிப்பு
பெருகி – அதிகரித்து
பெருமிதம் – பெருமை உணர்வு
மகிழ்ச்சி – இன்பம்
மங்கை – பெண்
மரபு – பாரம்பரியம்
மழுங்கி – கூர்மை இழந்து
மனை – வீடு
மாரி – மழை
மிரண்டு – கட்டுப்பாடு இழந்து
மின்னின – மிளிர்ந்தன
முதியவர் – வயதானவர்
மூழ்குதல் – அமிழ்தல்
மெத்த – அதிக அளவு
மெருகு – பொலிவு / பளபளப்பு
மேன்மை – சிறப்பு / உயர்வு
யோசனை – சிந்தனை
வருத்தம் – வேதனை / துன்பம்
வள்ளல் – கொடையாளி
வாய்ப்பு – சந்தர்ப்பம்
வாழ்விடம் – வசிக்கும் இடம்
வான் – வானம்
விபரீதம் – மோசமான விளைவு
வியந்து – பிரமித்து
வியப்பு – ஆச்சரியம் /அதிசயம்
விழித்து – கண் திறந்து
வென்றிட – வெற்றி பெற்றிட
வேடிக்கை – விளையாட்டு

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***